# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

e-Paper | 08 புதன்கிழமை ஜுலை 2026 | 08 Wednesday July 2026 | Switzerland Edition

## சுவிசில் வரலாற்றுச் சம்பவம்




## 1989 ல் உயிரிழந்த தமிழர்களின் நினைவாக வீதிக்கு பெயர்

சுவிட்சர்லாந்தின் சூர் (CHUR) நகரில் 1989 ஆம் ஆண்டு ஜுலை 2 ஆம் திகதி இடம்பெற்ற தீவைத்தாக்குதலில் உயிரிழந்த நான்கு இலங்கைத் தமிழர்களை நினைவுகூரும் நிகழ்வு வியாழக்கிழமை நடைபெற்றது. உயிரிழந்தவர்களில் இரு சிறுவர்களும் அடங்கியிருந்தனர். அந்தத் தாக்குதல் இனவெறி அல்லது தீவிர வலதுசாரி நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் மீண்டும் வலுப்பெற்றுள்ள நிலையில் இந்த நினைவேந்தல் இடம்பெற்றது.

சம்பவம் நடைபெற்றதிலிருந்து 37 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி,

மிகுதி 03 ஆம் பக்கத்தில்...

## போலி பொலிஸ் மோசடிகளுக்கு எதிராக மேற்கு சுவிட்சர்லாந்தில் விசேட நடவடிக்கை

மேற்கு சுவிட்சர்லாந்தில் போலி பொலிஸ் அதிகாரிகள் பெயரில் இடம்பெறும் தொலைபேசி மோசடிகளை ஒடுக்க, பிரிபூர், ஜெனீவா, ஜுரா, நியூஷாத்தல், வோ, வலேஸ் மாநிலப் பொலிஸாரும், சுவிஸ் கூட்டாட்சி பொலிஸும் (Fedpol) இணைந்து விசேட நடவடிக்கையை ஆரம்பித்துள்ளன.

2022 முதல் இதுவரை 5,000-க்கும் மேற்பட்ட மோசடி சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன், சுமார் 18 மில்லியன் சுவிஸ் பிராங்குகள் மோசடியாகப்

மிகுதி 2 ஆம் பக்கத்தில்...

## சுவிட்சர்லாந்தில் வரி முறை – புதிய குடியேறிகளுக்கான முக்கிய தகவல்கள்

சுவிட்சர்லாந்தில் வேலை செய்து வருமானம் பெறும் அனைவரும், குடிமக்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் உட்பட, வரி செலுத்துவது கட்டாயமாகும். ஆனால் இந்நாட்டின் வரி முறை கூட்டாட்சி, கான்டன் மற்றும் நகராட்சி என மூன்று நிர்வாக




மட்டங்களில் பிரிக்கப்பட்டிருப்பதால், புதிய குடியேறிகளுக்கு இது சற்றுக் குழப்பமாக இருக்கலாம்.

சுவிட்சர்லாந்தில் வருமான வரி, ஒருவர் வசிக்கும் கான்டன் மற்றும் நகராட்சியைப் பொறுத்து

மிகுதி 03 ஆம் பக்கத்தில்...




# போலி பொலிஸ் மோசடிகளுக்கு எதிராக மேற்கு சுவிட்சர்லாந்தில் விசேட நடவடிக்கை

பறிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த மோசடிகளுக்குப் பின்னால் பெரும்பாலும் பிரான்ஸைத் தளமாகக் கொண்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் குழுக்கள் இருப்பதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சமூக ஊடகங்கள் மூலம் ‘எளிதில் பணம் சம்பாதிக்கலாம்’ என்ற ஆசைகாட்டி இளைஞர்களை குற்றவாளிகள் கூரியர்களாகச் சேர்த்துக்கொள்வதாகவும், அவர்கள் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடும் என்பதால் இவ்வாறான போலி வேலைவாய்ப்பு விளம்பரங்களில் சிக்காமல் அவதானமாக இருக்குமாறும் பொலிஸார் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.



# வாய்க்குள் செயல்படும் மினி ரோபோ

## பல் சிகிச்சையில் புதிய புரட்சி!

சுவிட்சர்லாந்தின் பாசெல் மற்றும் சூரிச் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள், பற்களை கிரவுன் பொருத்துவதற்காக தானியங்கியாகத் தயாரிக்கக்கூடிய சிறிய பல் மருத்துவ ரோபோ ஒன்றை உருவாக்கியுள்ளனர். ''MIR'' (Miniature Intraoral Robot) எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த ரோபோ, எதிர்காலத்தில் பல் சிகிச்சை நேரத்தைக் குறிப்பிடத்தக்க அளவில் குறைக்கும் என ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

சுமார் ஒரு வைன் கார்க் அளவிலான இந்த ரோபோ, 43 ஸ 26 ஸ 28 மில்லிமீட்டர் அளவுடையது. இதன் மோட்டார் மற்றும் கட்டுப்பாட்டு அமைப்புகள் நோயாளியின் வாய்க்கு வெளியே வைக்கப்பட்டுள்ளன. அவை நெகிழ்வான இயக்கத் தண்டுகள், கேபிள்கள் மற்றும் குழாய்கள் மூலம் ரோபோவுடன் இணைக்கப்பட்டுள்ளன.

இந்த தொழில்நுட்பத்தின் நோக்கம், நோயாளி முதன்முறையாக வரும்போதே அவரது பற்களை டிஜிட்டல் முறையில் ஸ்கேன் செய்து, அதனை அடிப்படையாகக் கொண்டு கிரவுனின் வடிவமைப்பைத் திட்டமிடுவதாகும். பின்னர் கிரவுன் உடனடியாக தயாரிக்கப்படுவதுடன், பல்லை தேவையான வடிவத்திற்கு அரைக்கும் பணியை இந்த ரோபோ மேற்கொள்ளும்.

ஒவ்வொரு நோயாளிக்கும் தனிப்பயனாக தயாரிக்கப்படும் பல் தாங்கியில் ரோபோ பொருத்தப்படுவதால், சிகிச்சையின்போது நோயாளி தலையை அசைத்தாலும் ரோபோ அதனுடன் இணைந்து நகரும் என ஆய்வின் முதன்மை ஆராய்ச்சியாளர் யுகிகோ டோமூகா தெரிவித்துள்ளார்.

செயற்கை ரெசின் மற்றும் கடினமான செராமிக் மாதிரிகளில் நடத்தப்பட்ட ஆரம்பகட்ட சோதனைகளில், இந்த ரோபோ 0.2 மில்லிமீட்டருக்கும் குறைவான பிழையுடன் மிகத் துல்லியமாக செயல்பட்டுள்ளது. மேலும், இது செலுத்தும் அழுத்தமும் பாதுகாப்பான அளவிலேயே இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அடுத்த கட்டமாக, ரோபோவில் சென்சர்கள் மற்றும் சிறிய கேமரா பொருத்தப்படவுள்ளது. இதன் மூலம் மின்தடை ஏற்பட்டாலும், வேலை நிறுத்திய இடத்திலிருந்து மீண்டும் துல்லியமாகச் செயல்பட முடியும் என்று ஆராய்ச்சி குழுத் தலைவர் ஜியோர்க் ராவ்டர் விளக்கமளித்துள்ளார்.

சுவிட்சர்லாந்தின் ஐணணிண்தடிண்ண்னு நிறுவனத்தின் நிதி உதவியுடன் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்தில் பாசெல், சூரிச் மற்றும் பேர்ன் பல்கலைக்கழகங்களுடன் இச்ட்டூணிஞ் ஆடிணிணுனுஞிடணணிடூணிஞ்டினுண் நிறுவனமும் இணைந்து செயல்பட்டு வருகிறது.

எனினும், இந்த மினி பல் ரோபோ மருத்துவமனைகளில் வழக்கமான பயன்பாட்டிற்கு எப்போது அறிமுகமாகும் என்பது குறித்து இதுவரை அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகவில்லை.

# சுவிசில் வரலாற்றுச் சம்பவம்






தாக்குதல் இடம்பெற்ற அலெக்சாண்டர்ஸ்ட்ராஸ்ஸே 38-க்கு அருகிலுள்ள இதுவரை பெயரிடப்படாத ஒரு சிறிய வீதிக்கு ‘நான்கு விளக்குகள் வீதி’ (Naanku Vilakkukal Viethi / Vier&Lichter&Weg) எனப் பெயரிடப்பட்டது. மேலும், உயிரிழந்தவர்களின் நினைவாக அங்கு நினைவுப் பலகையும் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் உரையாற்றிய சூர் (CHUR) நகர முதல்வர் ஹான்ஸ் மார்டின் மெயுலி, 1989 தீவைத்தாக்குதல் சூர் நகரின் வரலாற்றில் மிகவும் வேதனையூட்டும் நிகழ்வாகும் என்று குறிப்பிட்டார். அச்சம்பவத்தின் இனவெறி அல்லது வலதுசாரி தீவிரவாத நோக்கம் அக்காலத்தில் உரிய முறையில் விசாரிக்கப்படாததால் பல கேள்விகள் பதிலின்றி போய்விட்டதாகவும், இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்களும் தமிழர் சமூகமும் கூடுதல் வேதனையை அனுபவிக்க நேரிட்டதாகவும் அவர் தெரிவித்தார். நடந்தவற்றை மாற்ற முடியாது. உயிரிழந்தவர்களை மீண்டும் கொண்டுவரவும் முடியாது. ஆனால் அப்போது வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளப்படாத உண்மையை இன்று தெளிவாகச் சொல்லுவது எமது பொறுப்பாகும், என அவர் கூறினார்.

அத்துடன், அக்காலத்தில் அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் உயிரிழந்தோர், அவர்களது உறவினர்கள் மற்றும் தமிழர் சமூகத்திற்கான பொறுப்பை முழுமையாக நிறைவேற்றவில்லை என்பதையும் சூர் நகரம் அதிகாரப்பூர்வமாக ஒப்புக்கொண்டது.

நினைவேந்தல் நிகழ்வு ஒரு நிமிட மௌன அஞ்சலியுடன் ஆரம்பமானது. பின்னர் இந்து குரு சசிகுமார் தலைமையில் மதச் சடங்குகள் நடைபெற்றன. புதிய வீதிப்பெயர் மலர்மாலையால் அலங்கரிக்கப்பட்டதுடன், நினைவுப் பலகை புனித நீரால் அபிஷேகம் செய்யப்பட்டு, எண்ணெய் விளக்கு ஏற்றி அர்ப்பணிக்கப்பட்டது. தமிழ் இந்து சமயப் பிரார்த்தனைகளும் சங்கு முழக்கமும் நிகழ்வை சிறப்பித்தன.

இந்த நினைவுப் பலகை அமைக்கப்பட்டிருப்பது, 2025 மே மாதத்தில் சூர் (CHUR) நகர சபை நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும். சம்பவம் தொடர்பாக முழுமையான மீளாய்வும் நினைவுச் சின்னமும் அமைக்கப்பட வேண்டும் என அத்தீர்மானம் வலியுறுத்தியிருந்தது.

இதற்கு முன்னதாக, Tamedia ஊடகக் குழுமத்தின் Das Magazin வெளியிட்ட விசாரணை அறிக்கையில், 1989 தீவைத்தாக்குதலுக்குப் பின்னால் இனவெறி சார்ந்த நோக்கம் இருந்திருக்கலாம் என்பதற்கான புதிய தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சுவிட்சர்லாந்தில் வரி முறை – புதிய குடியேறிகளுக்கான முக்கிய தகவல்கள்

மாறுபடும். பெரும்பாலானவர்களுக்கு ஆண்டின் இறுதியில் வரி அறிக்கை (Tax Return) தாக்கல் செய்த பிறகே வரி கணக்கிடப்படுகிறது. ஆனால் L அல்லது B அனுமதிப்பத்திரம் கொண்ட வெளிநாட்டவர்களுக்கு பொதுவாக சம்பளத்திலிருந்து நேரடியாக Withholding Tax கழிக்கப்படுகிறது.

நாட்டில் கூட்டாட்சி வருமானவரி, கான்டன் வரி, நகராட்சி வரி, தேவாலய வரி உள்ளிட்ட பல வகை வரிகள் வசூலிக்கப்படுகின்றன. கூட்டாட்சி வரி நாடு முழுவதும் ஒரே மாதிரியாக இருக்கும் நிலையில், இது சமூகப் பாதுகாப்பு மற்றும் தேசிய சேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. 2026ஆம் ஆண்டில் ஒருவரின் சராசரி கூட்டாட்சி வருமானவரி சுமார் 2,300 சுவிஸ் ஃபிராங்க் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கான்டன் மற்றும் நகராட்சி வரிகள் உள்ளூர் சேவைகள், கல்வி, சுகாதாரம் மற்றும் பொதுப் போக்குவரத்து உள்ளிட்ட துறைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் சூரிச், ஜெனீவா, பேர்ன், வோ போன்ற பகுதிகளில் வரிச்சுமை மாறுபடுகிறது.

சில கான்டன்களில் மதத்தைச் சேர்ந்தவர்களிடம் தேவாலய வரியும் அறவிடப்படுகிறது. இதிலிருந்து விலக விரும்பினால், அதிகாரப்பூர்வமாக பதிவு நீக்கம் செய்ய வேண்டியது அவசியமாகும்.

வெளிநாட்டவர்களில், ஆண்டு வருமானம் 120,000 ஃபிராங்கை மீறுவோர் அல்லது கூடுதல் வருமானம்/சொத்துகள் கொண்டோர் கட்டாயமாக வரி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். மற்றவர்கள் பெரும்பாலும் சம்பளத்திலிருந்து வரி கழிக்கப்படும் முறையில் வரி செலுத்துகின்றனர்.

சுவிட்சர்லாந்தில் சொத்து, பரம்பரை, வாகன, நாய் வளர்ப்பு வரி உள்ளிட்ட பல்வேறு வரிகளும் நடைமுறையில் உள்ளன. மேலும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு சுங்க வரி மற்றும் மதிப்புக்கூட்டல் வரி விதிக்கப்படுகிறது.

நிதியாண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை நடைபெறுகிறது. வரி அறிக்கைகள் பொதுவாக அடுத்த ஆண்டு மார்ச் 31க்குள் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

சுவிட்சர்லாந்தின் வரி முறை ஆரம்பத்தில் சிக்கலாகத் தோன்றினாலும், அது பிராந்திய சுயாட்சி மற்றும் வெளிப்படைத்தன்மையை அடிப்படையாகக் கொண்டதாகும். புதிய குடியேறிகள் தாங்கள் வசிக்கும் கான்டனின் விதிகளை முன்கூட்டியே அறிந்து செயல்படுவது அவசியமாகும்.



# சுவிட்சர்லாந்தின் ஓய்வூதிய அமைப்பு

# நவீன வேலை வாழ்க்கைக்கு ஒத்துப்போகவில்லை

சுவிட்சர்லாந்தின் ஓய்வூதிய அமைப்பு, இடையீடு இல்லாத முழுநேர வேலை வாழ்க்கையை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டிருப்பதால், நவீன வேலை முறைகளுக்கு ஏற்ப இல்லாமல் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பகுதி நேர வேலை மற்றும் தொழில் இடைவேளைகள் அதிகரித்துள்ள நிலையில், அவை ஓய்வூதிய கணக்கீட்டில் பாதகமாகவே கருதப்படுகின்றன. இதனால் பலர், குறிப்பாக பெண்கள், குறைந்த ஓய்வூதிய பலன்களை பெறும் நிலை உருவாகியுள்ளது.

சுவிட்சர்லாந்தின் மூன்று தூண் ஓய்வூதிய அமைப்பு (three&pillar system) மக்கள்தொகை மாற்றம் மற்றும் வேலை வாய்ப்பு மாற்றங்களால் அதிக அழுத்தத்தை சந்தித்து வருகிறது. இதனால் அமைப்பு வழங்கும் வாக்குறுதிகளுக்கும் நிஜ நிதி நிலைக்கும் இடையே இடைவெளி அதிகரித்து வருகிறது.

முக்கிய பிரச்சினைகளில் ஒன்று இரண்டாம் தூண் ஓய்வூதிய அமைப்பில் உள்ள கூட்டிணைப்பு கழிவு ஆகும். பகுதி நேரமாக வேலை செய்பவர்களின் வருமானத்தின் ஒரு பகுதி காப்பீட்டில் சேராததால், அவர்களின் ஓய்வூதிய சேமிப்பு குறைவதாக கூறப்படுகிறது.

உயர் வருமானம் பெற்றவர்களுக்கும் தொழில் இடைவேளைகள் இருந்தால் ஓய்வூதியத்தில் பெரிய பாதிப்பு ஏற்படுவதாகவும் ஆய்வு குறிப்பிடுகிறது.

இந்த நிலையை சரிசெய்ய, கூட்டிணைப்பு கழிவை மாற்றுதல், குறைந்த வரம்புகளை குறைத்தல், ஓய்வு வயதில் நெகிழ்வுத்தன்மை வழங்குதல் போன்ற சீர்திருத்தங்கள் அவசியம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையில், தனிநபர் ஓய்வூதிய திட்டமிடலும் மிக முக்கியமாக மாறியுள்ளது. குறிப்பாக வரிவிலக்கு பெறும் மூன்றாம் தூண் (Pillar 3a) சேமிப்புகளை பயன்படுத்தி முன்கூட்டியே திட்டமிட வேண்டும் என நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்.

ஓய்வூதிய முடிவுகள்–ஒரே தொகையாகப் பெறலாமா அல்லது மாதாந்திர ஓய்வூதியமாகப் பெறலாமா போன்றவை–தனிநபர் வாழ்க்கை சூழ்நிலைக்கு ஏற்ப கவனமாக எடுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கம் மட்டுமன்றி, நிறுவனங்களும் அதிக நெகிழ்வான ஓய்வூதிய திட்டங்களை வழங்குவதன் மூலம் இந்த பிரச்சினையை குறைக்க முடியும் எனவும் ஆய்வு தெரிவிக்கிறது.




## சுவிட்சர்லாந்து தேசிய கால்பந்து அணியில் விளையாடும் வெளிநாட்டு வீரர்கள்

# விரைவாக சுவிஸ் குடியுரிமை பெறுகிறார்களா?

சுவிட்சர்லாந்தை சர்வதேச போட்டிகளில் பிரதிநிதித்துவப்படுத்த, தேசிய கால்பந்து அணி உட்பட அனைத்து விளையாட்டு வீரர்களும் சுவிஸ் குடியுரிமை பெற்றிருக்க வேண்டும்.

விரைவுபடுத்தப்பட்ட குடியுரிமை (fast&track naturalisation) பெறுவதற்கு, அவர்கள் மற்ற விண்ணப்பதாரர்களைப் போலவே சுவிஸ் குடியுரிமைக்கான அனைத்து சட்டத் தகுதிகளையும் பூர்த்தி செய்ய வேண்டும்.

ஆனால், சில நடைமுறை அம்சங்களில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

உதாரணமாக, பொதுவாக குடியுரிமை வழங்கும் செயல்முறை இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடும். ஆனால் தேசிய அணிக்காக தேர்வாகும் விளையாட்டு வீரர்களின் விண்ணப்பங்கள் விரைவாக பரிசீலிக்கப்படுவதால், அவர்கள் மிகவும் குறுகிய காலத்திலேயே குடியுரிமையைப் பெற முடிகிறது

கோடைக்கால உச்சப் பயண நேரத்தில் நீண்ட வரிசைகள் இருக்கும் என விமான நிலையங்கள் எச்சரிக்கை

கோடைக்காலத்தில் அதிகரிக்கும் பயணிகள் எண்ணிக்கையும், புதிய நுழைவு/வெளியேற்ற முறை (Entry/Exit System & EES) எல்லைச் சோதனைகளும் காரணமாக, சுவிட்சர்லாந்தின் விமான நிலையங்கள் பயணிகள் நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டியிருக்கும் என்பதால், கூடுதல் நேரத்தை ஒதுக்கி முன்கூட்டியே வருமாறு அறிவுறுத்தியுள்ளன.

சுவிட்சர்லாந்தின் மூன்று முக்கிய சர்வதேச விமான நிலையங்களான சூரிச் (Zurich), ஜெனீவா (Geneva), மற்றும் பாசல் யூரோஏர்போர்ட் (Basel EuroAirport) ஆகியவை, கோடைக்காலத்தில் எதிர்பார்க்கப்படும் அதிக பயணிகள் வருகையுடனும், புதிய உஉகு எல்லைச் சோதனைகள் நடைமுறைக்கு வருவதாலும், கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) சோதனை மையங்களில் காத்திருக்கும் நேரம் அதிகரிக்கும் என்று பயணிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.

இந்த அறிவிப்பு, குறிப்பாக ஷெங்கன் (Schengen) பிராந்தியத்திற்கு வெளியே உள்ள நாடுகளுக்குச் செல்லும் அல்லது அங்கிருந்து வரும் பயணிகளுக்கு மிகவும் பொருந்தும்.

# சுவிட்சர்லாந்தில் ஜூலை முதல் அமுலுக்கு வந்த முக்கிய மாற்றங்கள்




# பெற்றோர் சட்டம் முதல் சுகாதார காப்பீடு வரை 8 புதிய விதிமுறைகள்

சுவிட்சர்லாந்தில் ஜூலை 1 முதல் பல முக்கிய சட்ட மற்றும் நிர்வாக மாற்றங்கள் அமலுக்கு வந்துள்ளன. குழந்தைகளை வளர்ப்பது முதல் சாலைப் போக்குவரத்து, சுகாதாரக் காப்பீடு மற்றும் தொலைபேசி மோசடிகளைத் தடுப்பது வரை பல துறைகளில் புதிய விதிமுறைகள் நடைமுறைக்கு வந்துள்ளன.

### 1. குழந்தைகளை வன்முறையின்றி வளர்ப்பது சட்டப்பூர்வ கடமை

ஜூலை 1 முதல் பெற்றோர் குழந்தைகளை எந்தவித உடல் அல்லது மன வன்முறையும் இன்றி வளர்க்க வேண்டும் என்பது சுவிட்சர்லாந்தின் சிவில் சட்டத்தில் அதிகாரப்பூர்வமாக இணைக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளுக்கு எதிரான வன்முறை ஏற்கனவே சட்டவிரோதமானதாக இருந்தாலும், இப்போது ‘வன்முறையற்ற பெற்றோர் வளர்ப்பு’ என்ற கொள்கையும் சட்டத்தில் தெளிவாக சேர்க்கப்பட்டுள்ளது. குழந்தைகளை அவமதிக்கும் தண்டனைகள் அல்லது உடல் தண்டனைகளுக்கு சமூகத்தில் இடமில்லை என்று அரசு தெரிவித்துள்ளது.

### 2. வலப்புறமாக முந்திச் சென்றால் 200 பிராங்க் அபராதம்

நெடுஞ்சாலையில் மற்றொரு வாகனத்தை வலது பாதை வழியாக முந்திச் செல்லும் ஓட்டுநர்களுக்கு இனி 200 சுவிஸ் பிராங்க் அபராதம் விதிக்கப்படும்.

மேலும், முக்கிய சாலைகளில் வலப்புறமாக முந்திச் சென்றால் 140 பிராங்க், போக்குவரத்து தீவுகள் அல்லது தடுப்புகளை தவறான திசையில் சுற்றிச் சென்றால் 100 பிராங்க் அபராதம் விதிக்கப்படும்.

### 3. கார் பந்தயங்களுக்கு மீண்டும் அனுமதி

1955ஆம் ஆண்டு லெ மான்ஸ் (Le Mans) போட்டியில் ஏற்பட்ட விபத்துக்குப் பின்னர் விதிக்கப்பட்டிருந்த சுற்றுப்பாதை கார் பந்தயத் தடை தற்போது நீக்கப்பட்டுள்ளது.

எனினும், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் விதிமுறைகளை பூர்த்தி செய்யும் போட்டிகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும். அனுமதியில்லாத தெரு கார் பந்தயங்கள் தொடர்ந்து சட்டவிரோதமாகவே இருக்கும்.

### 4. புதிய சாலை அடையாளப் பலகைகள்

சாலை மற்றும் நடைபாதை அடையாளங்களை நாடு முழுவதும் ஒரே மாதிரியாக மாற்றும் திட்டமும் ஜூலை 1 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இதன்படி:

மிதிவண்டிப் பாதைகள் சிவப்பு பின்னணியில்



வெள்ளை எழுத்துகளுடன் தெளிவாகக் குறிக்கப்படும்.

மலை நடைபயணிகளுக்கான மஞ்சள் நிற வழி காட்டிப் பலகைகள் அதிகரிக்கப்படும்.

முக்கிய சுற்றுலாத் தலங்களில் கூடுதல் வழி காட்டிப் பலகைகள் நிறுவப்படும்.

நகரங்களில் எந்த மொழிகளில் சாலைப் பலகைகள் அமைக்க வேண்டும் என்பதற்கும் புதிய வழி காட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஆபத்தான சந்திப்புகளில் மிதிவண்டிப் பாதைகள் சிவப்பு நிறத்தில் குறிக்கப்படும்.

மின்சார வாகன சார்ஜிங் நிலையங்கள் பச்சை நிற அடையாளங்களுடன் காட்டப்படும்.

## 5. இரவு நேரங்களில் கால்நடைகளை கொண்டு செல்ல அனுமதி

இதுவரை இரவு நேரங்களிலும், ஞாயிற்றுக் கிழமைகளிலும் மற்றும் பொது விடுமுறை நாட்களிலும் கால்நடைகளை வாகனங்களில் கொண்டு செல்ல தடை இருந்தது.

ஜூலை 1 முதல் அந்தத் தடை நீக்கப்பட்டுள்ளது. கோடைக்கால அதிக வெப்பத்திலிருந்து கால்நடைகளைப் பாதுகாப்பதற்கும், பகல் நேர போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்கும் இந்த மாற்றம் கொண்டுவரப்பட்டதாக அரசு தெரிவித்துள்ளது.

## 6. போலி தொலைபேசி அழைப்புகளைத் தடுக்க புதிய நடைமுறை

வெளிநாடுகளில் இருந்து சுவிஸ் கைப்பேசி எண்களுக்கு வரும் அழைப்புகள் இனி தொலைத்தொடர்பு நிறுவனங்களால் சிறப்பு அடையாளத்துடன் காட்டப்பட வேண்டும்.

அவ்வாறு அடையாளப்படுத்த முடியாவிட்டால், அந்த அழைப்புகள் தடுக்கப்பட வேண்டும் அல்லது 'அடையாளம் தெரியாத அழைப்பு' (Anonymous Call) எனக் காட்டப்பட வேண்டும். இதன் மூலம் தொலைபேசி மோசடிகளை குறைப்பதே அரசின் நோக்கமாகும்.

## 7. மனநல செயலிகளுக்கான செலவை சுகாதாரக் காப்பீடு ஏற்கும்

மனஅழுத்தம் (Depression) உள்ளிட்ட மனநலப் பிரச்சினைகளுக்கான டிஜிட்டல் சிகிச்சை செயலிகள் (Health Apps) இனி அடிப்படை சுகாதாரக் காப்பீட்டின் கீழ் வழங்கப்படும்.

மருத்துவர் பரிந்துரைத்தால், ஈனுணீணூனுது டிண் போன்ற அறிவியல் பீதியாக பரிசோதிக்கப்பட்ட மனநல செயலிகளுக்கான செலவை காப்பீட்டு நிறுவனம் ஏற்கும்.

## 8. குறைந்த செலவிலான மருந்துகளை பரிந்துரைக்க காப்பீட்டு நிறுவனங்களுக்கு அனுமதி

ஜூலை 1 முதல் சுகாதாரக் காப்பீட்டு நிறுவனங்கள், வாடிக்கையாளர்களுக்கு குறைந்த விலையிலான சிகிச்சை அல்லது மருந்துகளை பரிந்துரைக்க முடியும்.

உதாரணமாக, அதிக விலை கொண்ட பிராண்டு மருந்துகளுக்கு பதிலாக அதே தரமுடைய குறைந்த விலை ஜெனரிக் (Generic) மருந்துகளைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தலாம். மேலும், மருத்துவ ஆய்வகங்கள் இனி கூடுதல் சேவைக் கட்டணம் வசூலிக்க முடியாது. சில ஆய்வுப் பரிசோதனைகளின் கட்டணங்களும் குறைக்கப்பட்டுள்ளன.

இந்த இரண்டு நடவடிக்கைகளின் மூலம் ஆண்டுதோறும் சுமார் 85 மில்லியன் சுவிஸ் பிராங்குகள் சேமிக்கப்படும் என்றும், எதிர்காலத்தில் சுகாதாரக் காப்பீட்டு கட்டணங்கள் குறைவடைய இது உதவும் என்றும் அரசு தெரிவித்துள்ளது.

# QS உலக பல்கலைக்கழக தரவரிசை 2027;



# ETH சூரிச் உலகின் 8 ஆவது சிறந்த பல்கலைக்கழகமாகத் திகழ்வு

உலகின் சிறந்த உயர்கல்வி நிறுவனங்களை ஆண்டுதோறும் தரவரிசைப்படுத்தும் QS World University Rankings 2027 பட்டியலில், சுவிட்சர்லாந்தின் ETH சூரிச் உலகின் 8ஆவது சிறந்த பல்கலைக்கழகமாக இடம்பிடித்துள்ளது.

உயர்கல்வி ஆய்வு நிறுவனமான Quacquarelli Symonds (QS) வெளியிட்டுள்ள 2027ஆம் ஆண்டுக்கான தரவரிசையில், உலகம் முழுவதிலுமுள்ள 100-க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் பிராந்தியங்களைச் சேர்ந்த 1,504 பல்கலைக்கழகங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த ஆண்டு 98 புதிய பல்கலைக்கழகங்கள் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகங்களின் கல்வித் தரம், ஆய்வுக் கட்டுரைகளின் மேற்கோள்கள், வேலைவாய்ப்பு வழங்குநர்களின் மதிப்பீடு, பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு, ஆசிரியர்-மாணவர் விகிதம், சர்வதேச ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பங்கேற்பு, சர்வதேச ஆய்வு ஒத்துழைப்பு, நிலைத்தன்மை உள்ளிட்ட 10 முக்கிய அளவுகோல்களின் அடிப்படையில் கிகு இந்த தரவரிசையை வெளியிடுகிறது.

இந்த ஆண்டும் அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் (MIT) முழு 100 மதிப்பெண்களுடன் தொடர்ந்து 15ஆவது ஆண்டாக உலகின் சிறந்த பல்கலைக்கழகமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து இம்பீரியல் கல்லூரி லண்டன் மற்றும் ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக்கழகம் இணைந்து இரண்டாவது இடத்தையும், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் நான்காவது இடத்தையும், ஹார்வர்டு பல்கலைக்கழகம் ஐந்தாவது இடத்தையும் பெற்றுள்ளன.

### ETH சூரிச்சுக்கு ஒரு இடம் பின்னடைவு

சுவிட்சர்லாந்தின் முன்னணி தொழில்நுட்பப் பல்கலைக்கழகமான உகூஏ சூரிச், உலகின் முதல் 10 பல்கலைக்கழகங்களில் இடம்பெற்றுள்ளதுடன், அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவுக்கு வெளியே முதல் 10 இடங்களைப் பெற்றிருக்கும் இரண்டு பல்கலைக்கழகங்களில் ஒன்றாகவும் திகழ்கிறது.

எனினும், கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் உகூஏ சூரிச் ஒரு இடம் பின்னடைந்து, 2026ஆம் ஆண்டு 7ஆவது இடத்தில் இருந்த நிலையில், இந்த ஆண்டு 8ஆவது இடத்தை பெற்றுள்ளது.

இந்த ஆண்டுக்கான அதன் மொத்த மதிப்பெண் 96.3 ஆகும். இது 2026ஆம் ஆண்டில் 96.7 ஆகவும், 2025ஆம் ஆண்டில் 93.9 ஆகவும் இருந்தது.

### பல துறைகளில் உயர்ந்த மதிப்பெண்

ஆராய்ச்சி திறன், பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு, சர்வதேச மாணவர் சேர்க்கை மற்றும் நிலைத்தன்மை போன்ற பல பிரிவுகளில் உகூஏ சூரிச் 90-க்கும் அதிகமான மதிப்பெண்களைப் பெற்றுள்ளது.

ஆனால் ஆசிரியர்-மாணவர் விகிதம் தொடர்பான பிரிவில் 65 மதிப்பெண்கள் மட்டுமே பெற்றிருப்பது, அதன் மொத்த தரவரிசை சற்றுக் குறையக் காரணமாக அமைந்ததாக கிகு அறிக்கை தெரிவிக்கிறது.

# சுவிட்சர்லாந்தின் Zurich நிறுவனம்

## ஐரோப்பாவில் புதிய காப்பீட்டு சேவை விரிவாக்கம்




சுவிட்சர்லாந்தைத் தலைமையிடமாகக் கொண்ட Zurich Insurance Group நிறுவனம், வாழ்க்கை அறிவியல் (Life Sciences) துறைக்கான காப்பீட்டு சேவைகளை ஐரோப்பாவில் விரிவாக்குவதாக அறிவித்துள்ளது.

இந்த மாதத்திலிருந்து சுவிட்சர்லாந்து உட்பட 9 ஐரோப்பிய நாடுகளில் புதிய சிறப்பு காப்பீட்டு தீர்வு அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இதில் பெல்ஜியம், டென்மார்க், பிரான்ஸ், இத்தாலி, நெதர்லாந்து, ஸ்பெயின், ஸ்வீடன், சுவிட்சர்லாந்து மற்றும் ஐக்கிய இராச்சியம் அடங்குகின்றன. அமெரிக்காவில் ஏற்கனவே செயல்பட்டு வந்த வாழ்க்கை அறிவியல் காப்பீட்டு சேவைகளை தற்போது ஐரோப்பாவுக்கும் விரிவுபடுத்துவதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

மருந்து மற்றும் உயிரியல் தொழில்நுட்ப நிறுவனங்கள் உலகளாவிய அளவில் விரைவாக விரிவடைந்து வரும் நிலையில், ஒழுங்குமுறை சிக்கல்கள் மற்றும் வணிக அபாயங்கள் அதிகரித்து வருவதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், புதிய காப்பீட்டு திட்டம் தயாரிப்பு பொறுப்பு, சொத்து சேதம், வணிக இடைநிறுத்தம், போக்குவரத்து, விபத்து மற்றும் சுகாதார அபாயங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

மேலும், நிறுவனங்களின் அபாய மேலாண்மையை மேம்படுத்த ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப ஆதரவு சேவைகளும் வழங்கப்பட உள்ளன.

இந்த நடவடிக்கை, ஐரோப்பாவின் நடுத்தர சந்தை காப்பீட்டு துறையில் தனது நிலையை வலுப்படுத்தும் நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

# உலகின் 100 மதிப்புமிக்க நிறுவனங்கள் புதிய உச்சம்

## சுவிட்சர்லாந்து நிறுவனங்கள் இடம்பெற்றன

உலகின் முதல் 100 மிக மதிப்புமிக்க நிறுவனங்களின் மொத்த சந்தை மதிப்பு புதிய உச்சத்தை எட்டியுள்ளது. 2025 இறுதியுடன் ஒப்பிடுகையில் இது 18% உயர்ந்து 61.9 டிரில்லியன் அமெரிக்க டாலர் ஆக உயர்ந்துள்ளதாக ஆலோசனை நிறுவனம் உங தெரிவித்துள்ளது.

அமெரிக்க நிறுவனங்கள் பட்டியலில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. முதல் 100 நிறுவனங்களில் 56 நிறுவனங்கள் அமெரிக்காவைச் சேர்ந்தவை. சீனாவுக்கு 12 நிறுவனங்களும், ஜப்பான் மற்றும் இங்கிலாந்துக்கு தலா 5 நிறுவனங்களும் இடம்பெற்றுள்ளன.

தொழில்நுட்ப துறையில் Nvidia, Apple, Microsoft, Amazon, Alphabet உள்ளிட்ட நிறுவனங்கள் முன்னிலை வகிக்கின்றன. SpaceX நிறுவனமும் உயர்ந்த மதிப்பீட்டுடன் முன்னணி பட்டியலில் இணைந்துள்ளது.

சுவிட்சர்லாந்தைப் பொறுத்தவரை, Roche (45வது இடம்), Novartis (57வது இடம்), Nestl (66வது இடம்) ஆகியவை தொடர்ந்து பட்டியலில் இடம்பெற்றுள்ளன. மேலும் ABB நிறுவனம் 99வது இடத்துக்கு முன்னேறி முதல் 100 பட்டியலில் இணைந்துள்ளது.

இதன் மூலம், உலகளாவிய போட்டியில் சுவிஸ் நிறுவனங்கள் தொடர்ந்து வலுவான நிலையைத் தக்கவைத்துள்ளதாக ஆய்வு கூறுகிறது.

டிஜிட்டல் அடையாள அட்டை அறிமுகத்தை அரசு தாமதப்படுத்துகிறது டிசம்பர் 2026 இல் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டிருந்த போதிலும், நீண்ட காலமாக



உருவாக்கப்பட்டு வரும் இந்த மின்னணு அடையாள அட்டை (e&ID) இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்படாது.

செயற்கை நுண்ணறிவின் (AI) சமீபத்திய முன்னேற்றங்கள் காரணமாக, தரவு பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பை உறுதி செய்ய புதிய மேம்பாடுகள் அவசியமாகின்றன என்று கூட்டாட்சி நீதித்துறை அலுவலகம் (FOJ) ஜூன் 30 அன்று அறிவித்தது. இதன் காரணமாகவே, இணையவழியில் ஷு-ஐஈ ஐப் பெறுவதற்கான பாதுகாப்பு அளவை அதிகரிக்க ஊஇஓ முடிவு செய்துள்ளது.

'புதிய தொழில்நுட்ப நடவடிக்கைகள், குறிப்பாக, சாதனங்களில் தீம்பொருள்களை (malware) புகுத்துவதைக் கடினமாக்குவதற்கும், டீப்ஃபேக்குகளைக் (deepfakes) கண்டறிவதை மேம்படுத்துவதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளன,' என்று FOJ தெரிவித்துள்ளது.



# சூரிச் பழைய நகரை அறிமுகப்படுத்தும் சிறப்பு நடைபயண சுற்றுலா

வரலாறு, கலாசாரம் மற்றும் பாரம்பரிய கட்டிடக்கலையை ஒருங்கே அனுபவிக்க விரும்புவோருக்காக, சூரிச் சுற்றுலா அமைப்பு பழைய நகரை (Altstadt) சுற்றிப்பார்க்கும் சிறப்பு வழிகாட்டியுடன் கூடிய நடைபயணத்தை நடத்துகிறது.

சுமார் 2 மணி நேரம் நடைபெறும் இந்த சுற்றுலா, சூரிச் மத்திய ரயில் நிலையம் (Hauptbahnhof), பிரபலமான Bahnhofstrasse, Lindenhof மற்றும் Grossmnster உள்ளிட்ட முக்கிய வரலாற்று இடங்கள் வழியாக அழைத்துச் செல்லும்.

சுவிட்சர்லாந்தின் முன்னோடி ஆல்ஃபிரெட் எஷர், சூரிசில் வாழ்ந்த ரோமானியர்கள் மற்றும் மத சீர்திருத்தக் காலம் தொடர்பான சுவாரஸ்யமான தகவல்களும் இதில் பகிரப்படுகின்றன.

சூரிசின் வரலாற்றை புதிய கோணத்தில் அறிந்து கொள்ள விரும்பும் சுற்றுலாப் பயணிகளுக்கும், வரலாற்று ஆர்வலர்களுக்கும் இந்த நடைபயணம் சிறந்த அனுபவமாக இருக்கும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## சூரிச்சில் லெட்டன் நீச்சல் பகுதியை ஆண்டு முழுவதும் திறந்து வைக்க திட்டம்

சூரிச்: நகரின் லெட்டன் (Letten) உள்ளிட்ட பொது நீச்சல் பகுதிகளை ஆண்டு முழுவதும் மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்க வேண்டும் என்ற யோசனைக்கு சூரிச் நகர சபை ஆதரவு தெரிவித்துள்ளது.

தற்போது நகரின் 18 கோடைக்கால நீச்சல் வளாகங்களில் நான்கு மட்டுமே ஆண்டு முழுவதும் திறந்திருக்கும் நிலையில், லெட்டன் உள்ளிட்ட மற்ற பகுதிகளையும் குளிர்காலத்திலும் திறக்க முடியுமா என்பது குறித்து ஆய்வு செய்ய நகர சபை தீர்மானித்துள்ளது.

பசுமைக் கட்சி மற்றும் சமூக ஜனநாயகக் கட்சி (குக) முன்வைத்த தீர்மானங்கள் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டன. குளிர்காலத்திலும் இந்தப் பகுதிகளை பொதுமக்கள் ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு இடங்களாக பயன்படுத்த முடியும் என ஆதரவாளர்கள் தெரிவித்தனர்.

## கார் பயன்பாட்டைக் குறைக்கும் திட்டத்திற்கும் ஆதரவு

இதேவேளை, சூரிச் நகரை முடிந்தவரை கார் பயன்பாடு குறைந்த நகரமாக மாற்றும் போக்குவரத்து மாற்று முயற்சிக்கும் (Verkehrswende&Initiative) நகர சபை ஆதரவு அளித்துள்ளது.

குடியிருப்பு பகுதிகளில் தேவையற்ற வாகனப் போக்குவரத்தை குறைத்து, நடைபயணம் மற்றும் மிதிவண்டி பயன்பாட்டை ஊக்குவிப்பதே இந்த முயற்சியின் நோக்கமாகும்.

இந்த முன்மொழிவுகள் தொடர்பான இறுதி முடிவை, பின்னர் சூரிச் நகர மக்கள் வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்க உள்ளனர்.





# சூரிச் நகரின் சுவாரஸ்ய தகவல்கள் வெளியீடு

சூரிச் நகராட்சி 2026ஆம் ஆண்டுக்கான ''Quartierspiegel'' (நகர்ப்பகுதி தகவல் அறிக்கை) வெளியிட்டுள்ளது. இதில் 2025 ஆம் ஆண்டின் இறுதி வரையிலான புள்ளி விவரங்களுடன், சூரிச் மக்களின் வாழ்க்கை முறை, மக்கள் தொகை மற்றும் நகரின் தனித்துவங்களை வெளிப்படுத்தும் பல சுவாரஸ்யமான தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

2025ஆம் ஆண்டு இறுதியில் சூரிச் நகரின் மக்கள் தொகை 452,421 ஆக இருந்தது.

மதத்தைப் பொறுத்தவரை, தற்போது 15 சதவீதம் பேர் மட்டுமே புரொட்டஸ்டண்ட் (Reformed) மதத்தைச் சேர்ந்தவர்கள். கடந்த காலத்தில் இந்த எண்ணிக்கை 93 சதவீதம் வரை இருந்தது. இது நகரின் மத அமைப்பில் ஏற்பட்டுள்ள பெரிய மாற்றத்தை காட்டுகிறது.

80 வயதுக்கு மேற்பட்டவர்களில் 34 சதவீதம் பேர் திருமணமானவர்களாக உள்ளனர். 20 முதல் 30 வயதுக்குட்பட்ட இளைஞர்களில் 17 சதவீதம் பேர் பகிர்ந்து வசிக்கும் குடியிருப்புகளில் (WG) வாழ்கின்றனர்.

சூரிச் மக்களில் சுமார் நான்கில் ஒருவர், ஒருவருக்கு 50 சதுர மீட்டருக்கும் அதிகமான குடியிருப்பு பரப்பில் வசிக்கிறார். அதேபோல் 6 சதவீதம் பேர் மூன்றுக்கும் மேற்பட்ட குழந்தைகள் கொண்ட பெரிய குடும்பங்களில் வாழ்கின்றனர்.

மேலும், சூரிச்சில் வசிக்கும் ஒவ்வொரு 14 பேரில் ஒருவருக்கு ஜெர்மன் குடியுரிமை உள்ளது என்றும் அறிக்கை தெரிவிக்கிறது.

வாழ்க்கைத் தரம் குறித்து நடத்தப்பட்ட ஆய்வில், 97 சதவீதம் பேர் சூரிச்சில் வாழ விரும்புகிறோம் என்று தெரிவித்துள்ளனர். இருப்பினும், 39 சதவீதம் பேர் மட்டுமே நகரின் வாழ்க்கைத் தரம் மிகச் சிறந்தது என்று மதிப்பிட்டுள்ளனர்.

பொதுப் போக்குவரத்தைப் பொறுத்தவரை, 66 சதவீதம் மக்கள் தங்கள் வீட்டிலிருந்து 20 நிமிடங்களுக்குள் சூரிச் மத்திய ரயில் நிலையத்தை (HB) அடைய முடிகிறது.

கார் வைத்திருப்போரில் 37 சதவீதம் பேர் அதிகமாக பயன்படுத்தும் வாகனம் சாம்பல் நிற ஙணிடூடுண்தீச்ஞ்னுண ஆகும். ஆனால் Langstrasse பகுதியில் கருப்பு நிற Mer-



cedes&Benz அதிகமாக காணப்படுகின்றது. Hottingen பகுதியில் சாம்பல் நிற Mercedes&Benz அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

மிதிவண்டி பயன்பாட்டைப் பொறுத்தவரை, 14 சதவீதம் பேர் மட்டுமே தினமும் மிதிவண்டியில் பயணிக்கின்றனர். நகரம் மிதிவண்டி வசதிகளுக்காக போதிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று 41 சதவீதம் பேர் கருதுகின்றனர். மறுபுறம் 27 சதவீதம் பேர், மிதிவண்டிக்காக நகரம் ஏற்கனவே அதிகம் செய்கிறது என்ற கருத்தை வெளியிட்டுள்ளனர்.



பொழுதுபோக்கு வசதிகளிலும் சூரிச் முன்னணியில் உள்ளது. நகரில் 125 பூங்காக்கள், 99 பிக்னிக் இடங்கள், 16 வனக் குடில்கள் உள்ளன.

தாகத்தைத் தணிக்க, நகரம் முழுவதும் 1,281 பொதுக் குடிநீர் நீரூற்றுகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 436 நீரூற்றுகளில் இயற்கை ஊற்று நீர் பாய்கிறது.

இந்த 2026 Quartierspiegel அறிக்கைகள், நகரம் மற்றும் அதன் 34 நகர்ப்பகுதிகள் குறித்த வரலாறு, மக்கள் தொகை, வாழ்க்கை முறை மற்றும் பல்வேறு சுவாரஸ்ய தகவல்களை உள்ளடக்கியதாக சூரிச் நகராட்சி தெரிவித்துள்ளது.

# சூரிச் கத்திக்குத்து தாக்குதல் வழக்கு; நீதிமன்றத்தில் மௌனம் காத்த இளைஞர்

2024ஆம் ஆண்டு யூத மதத்தைச் சேர்ந்த ஒருவரை கத்தியால் குத்தி உயிருக்கு ஆபத்தான காயம் ஏற்படுத்திய வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள, தற்போது 17 வயதான இளைஞர் புதன்கிழமை நீதிமன்றத்தில் ஆஜரானார். எனினும், நீதிபதியின் அனைத்து கேள்விகளுக்கும் அவர் பதில் இல்லை என்று கூறி மௌனம் காத்தார்.

குற்றப்பத்திரிகையின்படி, குறித்த இளைஞர் இணையத்தின் மூலம் தீவிரவாத சிந்தனையில் ஈர்க்கப்பட்டு, பல வாரங்களாக தாக்குதலைத் திட்டமிட்டிருந்தார். தாக்குதல் நடைபெறுவதற்கு முன், சமூக வலைத்தளங்களில் தன்னை கலீபகத்தின் வீரர் எனக் கூறி காணொளி வெளியிட்டதுடன், உலகம் நேரலையில் பார்க்கும் வகையில் தாக்குதலை ஒளிபரப்பவும் முயன்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலில் ஒரு யூத வழிபாட்டுத் தலத்திற்குள் நுழைய முயன்ற அவர், அது மூடப்பட்டிருந்ததால் தெருவில் சென்றுகொண்டிருந்த 50 வயதுடைய யூத மரபுவழி குடும்பத் தந்தையை இலக்காகக் கொண்டு கத்தியால் தாக்கியதாக கூறப்படுகிறது.

நீதிமன்றத்தில் வாசிக்கப்பட்ட விசாரணை ஆவணங்களின்படி, தாக்குதலுக்குப் பிறகு காவல்துறையால் சுட்டுக் கொல்லப்பட்டு தியாகி ஆக வேண்டும் என்ற எண்ணமும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு இருந்ததாக தெரிவிக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட பின்னரும் அவர் தீவிரவாத அமைப்புக்கு ஆதரவான கோஷங்களை எழுப்பியதுடன், பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தினரையும் மிரட்டியதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.



இந்த வழக்கில், கொலை முயற்சி மற்றும் குற்றவியல் அமைப்புக்கு ஆதரவு வழங்கியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் அவர் விசாரணையை எதிர்கொள்கிறார். இளைஞர் என்பதால், வழக்கு பொதுமக்களுக்கு மூடப்பட்ட நிலையில் நடைபெற்று வருகிறது.

# வன்முறையைத் தூண்டியதாக மனித உரிமை ஆர்வலருக்கு அபராதம்



சமூக ஊடகத்தில் வன்முறையைத் தூண்டும் வகையில் பதிவிட்டதாக குற்றம் சாட்டப்பட்ட சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த 52 வயதுடைய கென்ய வம்சாவளி மனித உரிமை ஆர்வலருக்கு பெர்ன் நீதிமன்றம் இடைநிறுத்தப்பட்ட அபராதத் தண்டனை விதித்துள்ளது.

2024ஆம் ஆண்டின் தொடக்கத்தில், மத்திய கிழக்கு மோதலைக் குறிப்பிட்டு அவர் வெளியிட்ட சமூக ஊடகப் பதிவு வன்முறையைத் தூண்டும் வகையில் இருப்பதாக அரசுத் தரப்பு வாதிட்டது.

தனது பதிவு யூதர்களுக்கு எதிரானதல்ல; இஸ்ரேல் அரசின் நடவடிக்கைகளை விமர்சிப்பதற்காகவே வெளியிடப்பட்டதாக அவர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

எனினும், அவரது பதிவு ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்துச் சுதந்திரத்தின் எல்லையை மீறியுள்ளதாக நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதையடுத்து, 1,600 சுவிஸ் பிராங்குகள் இடைநிறுத்தப்பட்ட அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்ய அவருக்கு உரிமை உள்ளது.

# ஐரோப்பிய பாதுகாப்புக்கு OSCE இன்றியமையாதது

## சுவிஸ் வெளியுறவு அமைச்சர்

ஐரோப்பா தனது மிகக் கடுமையான பாதுகாப்பு நெருக்கடியை தற்போது எதிர்கொண்டு வருவதாக சுவிட்சர்லாந்தின் வெளியுறவு அமைச்சர் இக்னாசியோ காசிஸ் தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்தின் தி ஹேக்கில் நடைபெற்ற ஐரோப்பிய பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு அமைப்பின் (OSCE) நாடாளுமன்ற பேரவையின் 33ஆவது ஆண்டு அமர்வைத் தொடக்கி வைத்து உரையாற்றிய அவர், தற்போதைய சூழலில் உறுப்பு நாடுகளுக்கு இடையேயான தொடர்பு மற்றும் உரையாடலைத் தொடர்வதில் OSCE முக்கிய பங்கு வகிப்பதாகக் கூறினார்.

உக்ரைன் மீது ரஷ்யா நடத்தி வரும் போர் நான்கு ஆண்டுகளாக நீடித்து வருவதாகக் குறிப்பிட்ட காசிஸ், ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ள மூன்று ஜஊஊஇஉ பணியாளர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

2026 ஆம் ஆண்டில் ஜஊஊஇஉ தலைமைப் பொறுப்பை வகித்து வரும் சுவிட்சர்லாந்து, இது வரை பல முன்னேற்றங்களைப் பதிவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். குறிப்பாக, பல ஆண்டுகளாக ஒப்புதல் பெறாமல் இருந்த 2026ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருப்பது, அமைப்பின் செயல்பாடுகளைத் தொடர்வதற்கும், 57 உறுப்பு நாடுகளுக்கு இடையே ஒருமித்த முடிவை எட்ட முடியும் என்பதற்கும் முக்கிய அடையாளமாக அமைந்துள்ளதாக அவர் கூறினார்.

உக்ரைன் தொடர்பான விவகாரத்தில், உரையாடலே நீடித்த அமைதிக்கான அடிப்படை என காசிஸ் மீண்டும் வலியுறுத்தினார். அமைதிக்கான அரசியல் வாய்ப்பு உருவாகும் போது உடனடியாகச் செயல்படக்கூடிய வகையில் OSCE-யின் கட்டமைப்புகள் தயார்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், இந்த ஆண்டின் இரண்டாம் பாதியில், OSCE மற்றும் அதன் களப்பணிகளை மேலும் செயல்திறன் மிக்கதாக மாற்றும் சீர்திருத்தங்களை முன்னெடுக்க சுவிட்சர்லாந்து திட்டமிட்டுள்ளதாகவும், குறிப்பாக தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஐரோப்பிய கவுன்சிலுடன் ஒருங்கிணைப்பை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

உரையின் நிறைவில், இந்த ஆண்டு டிசம்பரில் சுவிட்சர்லாந்தின் லுகானோ நகரில் நடைபெறவுள்ள ஜஊஊஇஉ அமைச்சர்கள் சபைக் கூட்டத்தில் பங்கேற்க அனைத்து பிரதிநிதிகளுக்கும் அவர் அழைப்பு விடுத்தார்.

# இலங்கை சிறைச்சாலை படுகொலைகள்;




நவீனன்

# மறைக்கப்பட்ட இரத்த வரலாற்று தொடர்ச்சி

சிறைச்சாலை என்பது ஒரு நாட்டின் சட்ட ஆட்சியின் அடையாளமாக இருக்க வேண்டிய இடமாகும். குற்றம் சாட்டப் பட்டவர்களாக இருந்தாலும், தண்டனை பெற்றவர்களாக இருந்தாலும், மனித உரிமைகளும் உயிர் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட வேண்டிய இடமே சிறைச்சாலை. ஆனால் இலங்கையின் வரலாற்றில் சில சிறைச்சாலைகள் நீதியின் அடையாளங்களாக அல்லாமல், அரசியல் பழிவாங்கல்கள், இனவாத வன்முறைகள், கைதிகளுக்கிடையிலான மோதல்கள் மற்றும் பாதுகாப்பு அமைப்புகளின் தோல்விகளின் சாட்சிகளாக மாறியுள்ளன.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்றுள்ள அண்மைய வன்முறைச் சம்பவமும் இந்த நீண்டகால வரலாற்றின் மற்றொரு அத்தியாயமாகவே பார்க்கப்படுகிறது. கைதிகளுக்கிடையிலான மோதலில் முப்பது பேர் உயிரிழந்ததாகவும், சிறை பாதுகாவலர்கள் உட்பட பலர் கொல்லப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. அத்துடன் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தின் உடனடி காரணம்





பாதாள உலகக் குழுக்களுக்கிடையிலான மோதல், போதைப்பொருள் வியாபார முரண்பாடு அல்லது உள்கட்டமைப்பு பிரச்சினைகள் என கூறப்பட்டாலும், இலங்கையின் சிறைச்சாலை வரலாற்றை ஆராய்ந்தால் இதுபோன்ற வன்முறைகள் தனிப்பட்ட சம்பவங்கள் அல்ல என்பது தெளிவாகிறது.

## நீர்கொழும்பு சிறைச்சாலை: ஒரு வரலாற்றுச் சுமை:

நீர்கொழும்பு சிறைச்சாலை அமைந்துள்ள பகுதி காலனித்துவ வரலாற்றுடன் தொடர்புடையது. டச்சு ஆட்சிக்கால கட்டிட அமைப்புகளுக்குள் அமைந்துள்ள இந்த சிறைச்சாலை, நாட்டின் முக்கியமான தடுப்பு நிலையங்களில் ஒன்றாக இருந்து வருகிறது.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் அருகில் இருப்பதால், குடிவரவு சட்ட மீறல்கள், சட்டவிரோத பயண முயற்சிகள், போலி ஆவணங்கள், போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் கைது செய்யப்படுபவர்கள் பெருமளவில் இங்கு அடைக்கப்பட்டுள்ளனர்.

ஒரு காலகட்டத்தில் வெளிநாடுகளுக்கு செல்ல முயன்ற பல தமிழர்கள், குறிப்பாக போர் கால மற்றும் போருக்குப் பிந்தைய சூழலில், முறையான ஆவணங்கள் இல்லாத காரணத்தால் இங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். நீதிமன்ற விசாரணைக்காக காத்திருந்த பலருக்கு இந்த சிறைச்சாலை ஒரு இடைக்கால தடுப்பு முகாமாக இருந்தது.

ஆனால் காலப்போக்கில் அதிகமான கைதிகளை குறைந்த வசதிகளுடன் அடைத்து வைக்கும் நிலை உருவானது. சிறைக்கூடத்தை விட பல மடங்கு அதிகமான கைதிகள் அடைக்கப்படுவது, நிர்வாக குறைபாடுகள், போதைப்பொருள் வலையமைப்புகளின் செல்வாக்கு போன்றவை சிறைச்சாலை வன்முறைகளுக்கான சூழலை உருவாக்கின.

## வெலிக்கடை வரலாற்றின் இருண்ட பக்கம்:

இலங்கை சிறைச்சாலை வரலாற்றில் மிக மோசமான அத்தியாயங்களில் ஒன்றாக வெலிக்கடை சிறைச்சாலை படுகொலைகள் குறிப்பிடப்படுகின்றன.

1983 ஜூலை இன வன்முறைகளின் பின்னணியில் வெலிக்கடை சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் இலங்கை இன வரலாற்றில் அழியாத கறையாக உள்ளது.

1983 ஜூலை 25 மற்றும் 27 ஆகிய நாட்களில் வெலிக்கடை சிறைச்சாலைக்குள் இருந்த தமிழ் கைதிகள் மீது சிங்கள கைதிகளின் குழுக்கள் தாக்குதல் நடத்தின. பாதுகாப்பு அமைப்புகள் உரிய முறையில் தலையிடவில்லை என்ற குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டன.

இந்த கொடூர தாக்குதல்களில் 53 தமிழ் அரசியல் கைதிகள் கொல்லப்பட்டனர். உயிரிழந்தவர்களில் தமிழ் விடுதலை இயக்கங்களுடன் தொடர்புடைய அரசியல் கைதிகளே இருந்தனர். இந்த சம்பவம் ஒரு சாதாரண சிறை மோதல் அல்ல; இனவாத அரசியல் சூழல் சிறைச்சாலைச் சுவர்களுக்குள் எவ்வாறு பிரதிபலித்தது என்பதற்கான முக்கிய சாட்சியாக அது பார்க்கப்படுகிறது.

1987 ஆம் ஆண்டிலும் வெலிக்கடை




சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிராக மீண்டும் தாக்குதல் நடத்த முயற்சி இடம்பெற்றதாக முன்னாள் கைதிகளும் மனித உரிமை செயற்பாட்டாளர்களும் பதிவு செய்துள்ளனர். சிறைச்சாலை சுவர்கள் உடைக்கப்பட்டு கைதிகள் மீது தாக்குதல் நடத்தும் அபாயம் ஏற்பட்ட நிலையில், பாதுகாப்புப் படையினர் தலையிட்டு தமிழ் கைதிகளை பாதுகாப்பான இடத்திற்கு மாற்றியதாக கூறப்படுகிறது.

இந்த சம்பவம் 1983 படுகொலையின் பின்னரும் சிறைச்சாலை அமைப்பில் இன அடிப்படையிலான பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் தொடர்ந்திருந்ததை வெளிப்படுத்தியது.

## 2012 வெலிக்கடை கலவரம்

2012 நவம்பர் 9 ஆம் தேதி வெலிக்கடை சிறைச்சாலையில் மீண்டும் ஒரு பெரிய கலவரம் ஏற்பட்டது. சட்டவிரோத ஆயுதங்களை தேடும் சிறப்பு நடவடிக்கையின் போது கைதிகளுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் இடையே ஏற்பட்ட பதற்றம் வன்முறையாக மாறியது.

இந்த சம்பவத்தில் 27 கைதிகள் உயிரிழந்தனர் என்றும், 40 பேர் காயமடைந்தனர் என்றும் அதிகாரப்பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த சம்பவத்திற்குப் பின்னர் விசாரணைக் குழு அமைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அதன் முழுமையான அறிக்கை மற்றும் பரிந்துரைகள் பொதுமக்களுக்கு வெளிப்படையாக தெரியவில்லை என்ற விமர்சனங்கள் எழுந்தன.

இலங்கையின் பல பாதுகாப்பு சம்பவங்களைப் போலவே, சிறைச்சாலை வன்முறைகள் தொடர்பான விசாரணைகளும் பெரும்பாலும் வெளிப்படைத்தன்மை இல்லாமல் முடிவடைவதாக மனித உரிமை அமைப்புகள் குற்றம் சாட்டியுள்ளன.

## மகசின் சிறை- தமிழர்களின் கொலைக்களம்:

வெலிக்கடை சம்பவங்களுக்குப் பின்னர் தமிழ் அரசியல் கைதிகளையும் ஜேவிபி அரசியல் கைதிகளையும் தனியாக வைத்திருக்க மகசின் சிறைச்சாலை பயன்படுத்தப்பட்டது. இங்கு இன மற்றும் அரசியல் பின்னணிகள் வேறுபட்ட கைதிகள் ஒரே சிறை அமைப்புக்குள் வாழ வேண்டிய சூழல் இருந்தது.

1988 டிசம்பர் மாதம் ஜேவிபி அரசியல் கைதிகள் தங்களது சிறைப் பகுதியை வெடிகுண்டு மூலம் உடைத்து தப்பிச் சென்ற சம்பவம் குறிப்பிடத்தக்கது. அப்போது அருகில் இருந்த தமிழ் அரசியல் கைதிகளும் வெளியேற அழைக்கப்பட்டதாகவும், ஆனால் அவர்கள் வெளியேறவில்லை என்றும் முன்னாள் கைதிகள் கூறியுள்ளனர்.

இது அந்தக் காலகட்ட அரசியல் கைதிகளின் வேறுபட்ட நிலைப்பாடுகளையும், சிறைச்சாலைகளுக்குள் நிலவிய பதற்றமான சூழலையும் காட்டுகிறது.

## போகம்பரையில் மலையக தமிழர் சிறை:

கண்டி போகம்பரை சிறைச்சாலையும் இலங்கையின் அரசியல் கைதிகள் வரலாற்றில் முக்கிய இடம் பெற்றுள்ளது.

1987 காலப்பகுதியில் மலையகத் தமிழ் அரசியல் கைதிகள் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு எதிராக தாக்குதல் நடத்தும் அபாயம் ஏற்பட்டபோது, அவர்களை பாதுகாப்பான முறையில் மகசின் சிறைச்சாலைக்கு மாற்றியதன் மூலம் ஒரு பெரிய மோதல் தவிர்க்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இது சிறைச்சாலைகளில் கைதிகளின் பாதுகாப்பு என்பது நிர்வாக பிரச்சினை மட்டுமல்ல; அரசியல் மற்றும் இன உறவுகளுடனும் தொடர்புடையது என்பதை காட்டுகிறது. சிறிலங்கா சிறைகளில் தொடரும் பிரச்சினைகள் பல ஆண்டுகளாக நீடித்து வருகிறது.

இலங்கையின் சிறைச்சாலை வன்முறைகளை ஆய்வு செய்தால் சில பொதுவான காரணங்கள் மீண்டும் மீண்டும் தோன்றுகின்றன.



## பிந்துனுவேவா தடுப்பு முகாம் படுகொலை:

இலங்கை மத்திய மாகாணத்தின் பண்டாரவளை அருகிலுள்ள பிந்துனுவேவா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல், நாட்டின் சிறுபான்மை சமூகங்களின் பாதுகாப்பு குறித்த கடுமையான கேள்விகளை எழுப்பியது. பிந்துனுவேவா தடுப்பு முகாமில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த அப்பாவி தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

2000 ஆம் ஆண்டு அக்டோபர் 25 அன்று, பிந்துனுவேவா கிராமத்தைச் சேர்ந்ததாகக் கூறப்படும் நூற்றுக்கணக்கான சிங்களவர்கள் ஆயுதங்களுடன் தடுப்பு முகாமுக்குள் நுழைந்து கைதிகள் மீது தாக்குதல் நடத்தினர். கற்கள், பொல்லுகள், கத்திகள் உள்ளிட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் பலர் கடுமையாகக் காயமடைந்தனர். 27 தமிழ் கைதிகள் உயிரிழந்தனர்; பலர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் ஒரு தனிப்பட்ட வன்முறைச் சம்பவமாக மட்டுமல்லாமல், இலங்கையின் நீண்டகால இனமோதலின் பின்னணியில் சிறுபான்மை கைதிகளின் பாதுகாப்பு, சட்டத்தின் ஆட்சி மற்றும் அரச நிறுவனங்களின் பொறுப்பு ஆகியவற்றைச் சுற்றிய விவாதங்களையும் உருவாக்கியது.

சிறைப் படுகொலைகளுக்கை முக்கிய காரணமாக சிறைக் கொள்ளளவை மீறும் கைதிகள் எண்ணிக்கை, போதிய கண்காணிப்பு இல்லாமை, ஊழல் மற்றும் சட்டவிரோத வலையமைப்புகள், அரசியல் கைதிகளின் பாதுகாப்பின்மை, இன மற்றும் அரசியல் பதற்றங்களின் தாக்கம், வெளிப்படையான விசாரணைகள் இல்லாமை ஆகிய பல்வேறு நிலமைகளால் சிறைகளில் வன்முறைகள் அதிகரித்து வருகின்றன.

ஆயினும் அரசால் சிறைச்சாலை கலவரங்கள் இடம்பெறும் ஒவ்வொரு முறையும் உடனடி காரணங்கள் மட்டும் பேசப்படுகின்றன. ஆனால் அதன் பின்னால் உள்ள கட்டமைப்பு குறைபாடுகள் குறித்து போதுமான கவனம் செலுத்தப்படுவதில்லை.

நீர்கொழும்பு சிறைச்சாலை மரணங்கள் இலங்கைக்கு புதிய சம்பவம் அல்ல. அது பல தசாப்தங்களாக தொடரும் ஒரு ஆழமான பிரச்சினையின் புதிய வெளிப்பாடாகும். வெலிக்கடை 1983 படுகொலைகள், 1987 தாக்குதல் முயற்சிகள், 2012 கலவரம், மகசின் மற்றும் போகம்பரை சிறைச்சாலை சம்பவங்கள் என இலங்கையின் சிறைச்சாலை வரலாறு பல இருண்ட பக்கங்களை கொண்டுள்ளது.

ஒரு ஜனநாயக நாட்டின் வலிமை அதன் சிறைச்சாலைகளில் கூட மனித உரிமைகளை எவ்வாறு பாதுகாக்கிறது என்பதிலேயே அளவிடப்படுகிறது. கைதிகள் குற்றவாளிகளாக இருந்தாலும் அவர்கள் உயிரிழக்க வேண்டியவர்கள் அல்ல. சட்டத்தின் பாதுகாப்புக்குள் இருக்க வேண்டிய இடமே சிறைச்சாலை. ஆனால் இலங்கையின் அனுபவம் காட்டுவது என்னவென்றால், சிறைச்சாலைச் சுவர்களுக்குள் நடந்த பல மரணங்கள் இன்னும் முழுமையான உண்மை, பொறுப்புக் கூறல் மற்றும் நீதிக்காக காத்திருக்கின்றன என்பதே.

# சூரிச் விமான நிலையம்: 80 ஆண்டுகளுக்கு முன் தொடங்கிய வரலாற்றுப் பயணம்



சுமார் 80 ஆண்டுகளுக்கு முன்பு காடுகள் மற்றும் ஈரநிலங்கள் அகற்றப்பட்ட இடத்தில் உருவாக்கப் பட்டதே இன்று சூரிச் சர்வதேச விமான நிலையம்.

1940களில் க்ளோட்டென்-புலாக் பகுதியில் இருந்த இராணுவ பயிற்சி நிலம், பொதுமக்கள் விமான நிலையமாக மாற்றப்பட்டது. 1943ஆம் ஆண்டு அந்த நிலத்தை தேசிய நலனுக்காக விடு விக்க இராணுவத் துறை ஒப்புதல் அளித்தது. பின்னர் 655 ஹெக்டேர் நிலம் சுமார் 10 மில்லியன் ஃபிராங்க் மதிப்பில் வாங்கப்பட்டது.

1946ஆம் ஆண்டு கட்டுமானப் பணிகள் தொடங் கியபோது, ஈரநிலங்கள் அகற்றப்பட்டு நிலம் சமப்படுத்தப்பட்டது. மேலும், பயன்படுத்தப்படாத வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டதால் பணிகள் தாமதமடைந்து செலவும் அதிகரித்தது.

1948 ஜூன் 14ஆம் தேதி முதல் 1,900 மீட்டர் நீளமுள்ள முதல் ஓடுபாதை செயல்பாட்டுக்கு வந்தது. அதே ஆண்டு பின்னர் மேலும் ஒரு நீளமான ஓடுபாதையும் அமைக்கப்பட்டது.

தற்போது சூரிச் விமான நிலையத்தில் மூன்று ஓடுபாதைகள் உள்ளன. இன்று தினமும் சுமார் 750 விமானங்கள் இந்த விமான நிலையத்தில் புறப்பட்டு தரையிறங்குகின்றன.

சிறிய இராணுவ நிலமாக தொடங்கிய இந்த பகுதி, இன்று சுவிட்சர்லாந்தின் முக்கிய சர்வதேச விமான மையமாக வளர்ந்துள்ளது.

# சுவிட்சர்லாந்து; துன் நகரத்தில் புதிய நகரத் தலைவர் தேர்வு: SVP பெண் வெற்றி

துன் (Thun): சுவிட்சர்லாந்தின் துன் நகரில் நடை பெற்ற தேர்தலில், SVP கட்சியைச் சேர்ந்த Eveline Salzmann, நகரத்தின் முதல் பெண் நகரத் தலை வராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இரண்டாம் சுற்று வாக்கெடுப்பில் குச்டுத்ச்ணணை 6,304 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவரது போட்டியாளர் பசுமைக் கட்சியின் Andrea de Meuron 5,490 வாக்குகள் பெற்றார். வாக்குப்ப திவு விகிதம் சுமார் 38.7% ஆக இருந்தது.

முன்னாள் நகரத் தலைவர் ரஃபேல் லான்ஸ் (SVP) பெர்ன் மாகாண அரசில் தேர்வு செய்யப்பட்டதால் இந்த இடம் காலியாகியது.

அதே நேரத்தில், நகர நிர்வாகத்தில் இடதுசாரி (ரெட்-கிரீன்) கூட்டணி பெரும்பான்மை பெற்றுள்ளது. புதிய உறுப்பினராக Claudius Domeyer (SP) தேர்வு செய்யப்பட்டு, குஙக வேட்பாளரை வீழ்த்தினார்.

இதன் மூலம் ஐந்து உறுப்பினர்கள் கொண்ட நகர நிர்வாகத்தில், SP மற்றும் பசுமைக் கட்சிகள் இணைந்து பெரும்பான்மையை பெற்றுள்ளன.

இந்த தேர்தல் முடிவுகள் துன் நகர அரசியலில் புதிய அதிகார சமநிலையை உருவாக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.



# உலகின் செல்வந்த மக்கள் வாழும் நாடாக மீண்டும் சுவிட்சர்லாந்து




CLICK HERE

வீடியோவை பார்வையிட

சூரிச்: 2026 UBS Global Wealth Report அறிக்கையின்படி, ஒருவருக்கான சராசரி செல்வத்தின் அடிப்படையில் உலகின் மிகச் செல்வந்த மக்கள் வாழும் நாடாக சுவிட்சர்லாந்து மீண்டும் முதலிடத்தைத் தக்க வைத்துள்ளது.

2025 ஆம் ஆண்டில் சுவிட்சர்லாந்தில் ஒருவரின் சராசரி நிகரச் செல்வம் 910,382 அமெரிக்க டொலர் (சுமார் 734,000 சுவிஸ் பிராங்க்) என மதிப்பிடப்பட்டுள்ளது. அமெரிக்கா இரண்டாவது இடத்திலும், லக்சம்பர்க் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

மேலும், சுவிட்சர்லாந்தில் வசிக்கும் மக்களில் சுமார் 13.1 சதவீதம், அதாவது 9 லட்சத்து 44 ஆயிரம் பேர், அமெரிக்க டொலர் மதிப்பில் கோடீஸ்வரர்களாக இருப்பதாக அறிக்கை தெரிவிக்கிறது. எனினும், செல்வம் அனைவரிடமும் சமமாகப் பகிரப்படவில்லை என்பதையும் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

மத்தியச் செல்வம் (Median Wealth) அடிப்படையில் சுவிட்சர்லாந்து உலகில் எட்டாவது இடத்தில் உள்ளது. 2000 முதல் 2025 வரையிலான காலத்தில் சராசரி செல்வம் உயர்ந்திருந்தாலும், மத்தியச் செல்வம் சுமார் 15 சதவீதம் குறைந்துள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால், சுவிட்சர்லாந்து உலகின் மிகச் செல்வந்த நாடாகத் தொடர்ந்தாலும், அந்தச் செல்வம் மக்களிடையே சமமாகப் பகிரப்படவில்லை என்பதையும் இந்த ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது.

## சுவிஸ் செய்தி துளிகள்....

### சுவிட்சர்லாந்து: புதிய வெப்ப அலைக்கு எச்சரிக்கை

சுவிட்சர்லாந்தில் புதிய வெப்ப அலை குறைந்தது அடுத்த திங்கட்கிழமை வரை நீடிக்கும் என Meteo Suisse எச்சரித்துள்ளது.

கடந்த வாரம் முடிவடைந்த வெப்ப அலையால் மருத்துவமனைகளின் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் நோயாளிகள் அதிகரித்த நிலையில், இந்த புதிய வெப்ப அலை சுகாதார அமைப்புக்கு மீண்டும் அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக முதியவர்கள், உடல்நலக் குறைபாடு உள்ளவர்கள் மற்றும் தனியாக வசிப்பவர்கள் மீது கூடுதல் கவனம் செலுத்துமாறு ஜெனீவா மற்றும் வோ மாகாண சுகாதாரத் துறைகள் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளன.

### அகதி மையங்கள்: உள்ளூர் மக்களுக்கு வீட்டோ அதிகாரம் கோரி SVP

சுவிட்சர்லாந்தின் SVP கட்சி, புதிய அகதி மையங்கள் அமைப்பதற்கு முன் அந்தப் பகுதி மக்களுக்கு மறுப்பு (வீட்டோ) தெரிவிக்கும் அதிகாரம் வழங்க வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் இரண்டு தீர்மானங்களை முன்வைத்துள்ளது.

### சூரிக் விமான நிலைய விரிவாக்கத்திற்கு ஜெர்மனியின் எதிர்ப்பு

சூரிக் விமான நிலையத்தின் இரண்டு ஓடு பாதைகளை நீட்டிக்கும் திட்டத்திற்கு ஜெர்மனியின் நான்கு எல்லை மாவட்டங்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. விமான இரைச்சல் அதிகரிக்கும் என்ற காரணத்தால் அவை அதிகாரப்பூர்வமாக மேல்முறையீடு செய்துள்ளன.

### வீட்டு விலைகள் மீண்டும் உயர்வு

ஜூன் மாதத்தில் சுவிட்சர்லாந்தில் வீடுகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளின் விலைகள் தொடர்ந்து உயர்ந்துள்ளன. சூரிக் பகுதியில் விலை உயர்வு நாட்டிலேயே அதிகமாக பதிவாகியுள்ளது.

### ஆகஸ்ட் 1 பட்டாசுகளுக்கு தடை விதிக்க வாய்ப்பு

தற்போதைய வெப்ப அலை மற்றும் வறட்சி நீடித்தால், தேசிய தினமான ஆகஸ்ட் 1 அன்று பல மாகாணங்களில் பட்டாசு வெடிக்க தடை விதிக்கப்படலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். காட்டுத் தீ அபாயம் அதிகரித்துள்ளதே இதற்குக் காரணமாகும்.








# மட்டக்களப்பில் விழிப்புணர்வு நிகழ்வு

**எஸ்.எஸ்.அமிர்தகழியான்**

விபத்துக்களால் பறிபோகும் இலங்கையர்களின் உயிரை காப்பாற்றுவதற்கான விழிப்புணர்வு நிகழ்வானது பிராந்திய சுகாதார பணிப்பாளர் ஆர்.முரளீஸ்வரன் தலைமையில் மாவட்ட தொற்றா நோய் தடுப்பு அதிகாரி எம்.ரூதேசன் ஏற்பாட்டில் பிராந்திய சுகாதார பணிமனையில் அண்மையில் (06) இடம் பெற்றது.

நாடளாவிய ரீதியில் தேசிய விபத்துத் தடுப்பு ஆலோசனைக் குழு மற்றும் சுகாதார அமைச்சின் தொற்றா நோய்கள் பிரிவினரினால் விபத்துக்களால் பறிப்போகும் உயிரை காப்பாற்றுவதற்கான செயற்திட்டம் ஒவ்வொரு நாளும் ஒரு சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

06 திகதி முதல் 10ஆம் திகதி வரை சாலை விபத்துத் தடுப்பு தினமாகவும், ஜூலை 07, பணியிட விபத்துத் தடுப்பு தினமாகவும், ஜூலை 08, வீடு மற்றும் முதியோர் இல்ல விபத்துத் தடுப்பு தினமாகவும், ஜூலை 09, நீரில் மூழ்கி இறக்கும் விபத்துத் தடுப்பு தினமாகவும், ஜூலை 10, பள்ளி, மழலையர் பாடசாலை மற்றும் பகல்நேரப் பராமரிப்பு மைய விபத்துத் தடுப்பு தினமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வருடா வருடம் இலங்கையில் 10000 மேற்பட்ட மரணங்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 300 தொடக்கம் 350 மரணங்களும் பதிவாகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மாவட்டத்தில் கடந்த வருடம் கிடைக்கப் பெற்ற புள்ளிவிவர தரவுகளின் படி 31000 நபர்கள் உள் நோயாயராகவும் வெளிநோயாளராக 8000 மேற்பட்ட நபர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

நாட்டில் உள்ள அரச மருத்துவமனைகளில் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்படும் நோயாளிகளில் கணிசமான சதவீதத்தினர் விபத்துக்களாலேயே சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவற்றுல் விழுதல், வீதி விபத்துக்கள், தீக்காயங்கள், மின் அதிர்ச்சி, வெட்டு காயங்கள், பணியிட விபத்துக்கள், நீரில் மூழ்குதல், விலங்குகள் கடித்தல் மற்றும் வீட்டு விபத்துக்கள் ஆகியவை முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன.

சுகாதார அமைச்சானது அபாயப் பகுதிகளைக் கண்டறியும் நடவடிக்கைகளையும், பாதுகாப்பான சூழலை உருவாக்குவதற்கான நடைமுறைத் திட்டங்கள் மற்றும் தீவு முழுவதும் விபத்துக்களைக் குறைப்பதற்கான குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால நடவடிக்கைகளைச் செயல்படுத்தவும் திட்டமிட்டுள்ளது.

சுகாதார அமைச்சானது விபத்துக்களின் தாக்கத்தைக் குறைப்பதற்கு பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.








# இலங்கையின் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் 30 அதிகாரிகளுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி

**ஹஸ்பர் ஏ.எச்**

இலங்கையின் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் (National Audit Office & NAO) 30 அதிகாரிகளுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சித் திட்டம், இந்தியாவின் நோய்டாவில் அமைந்துள்ள சர்வதேச தகவல் அமைப்புகள் மற்றும் கணக்காய்வு மையம் (International Centre for Information Systems and Audit & iCISA) இல் 2026 ஜூன் 22 முதல் ஜூலை 3 வரை நடைபெற்றது.

2002 மார்ச் மாதத்தில் நிறுவப்பட்ட டிஇஜகுஅ, தகவல் தொழில்நுட்பக் கணக்காய்வுத் துறையில் உலகளாவிய முன்னணி பயிற்சி நிறுவனமாக விளங்குகிறது.

இது சர்வதேச உச்ச கணக்காய்வு நிறுவனங்களின் அமைப்பான (INTOSAI) தகவல் தொழில்நுட்பக் கணக்காய்வு செயற்குழுவின் (Working Group on IT Audit) உலகளாவிய பயிற்சி மையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நவீன, நடைமுறை சார்ந்த மற்றும் தரப்படுத்தப்பட்ட பயிற்சி முறைகள் மூலம் உலகின் 150-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த கணக்காய்வு நிபுணர்களுக்கு இந்நிறுவனம் பயிற்சி வழங்கி, உலகளாவிய கணக்காய்வு திறன்களை வலுப்படுத்தி வருகிறது.

இரண்டு வாரங்கள் நடைபெற்ற இப்பயிற்சி, தகவல் தொழில்நுட்பக் கணக்காய்வை (Information Technology Audit) மையப்படுத்தியதாக அமைந்தது. இதில் தகவல் அமைப்புகளின் (Information Systems & IS) கணக்காய்வு, தகவல் தொழில்நுட்ப நிர்வாகக் கட்டமைப்புகள் (IT Governance Frameworks), தரவு தனியுரிமை, தகவல் சொத்துக்களின் பாதுகாப்பு, இணையப் பாதுகாப்பு (Cyber Security), ஒப்பந்தங்களில் மோசடிகளை கண்டறிய ஙீஇகீ தொழில்நுட்பத்தின் பயன்பாடு, இந்தியாவின் பொது கொள்முதல் சூழல் மற்றும் கொள்முதல் நடைமுறைகள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகள் கற்பிக்கப்பட்டன.

இலங்கையின் தேசிய கணக்காய்வு அலுவலக அதிகாரிகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த திறன் மேம்பாட்டு பயிற்சித் திட்டத்தின் இது இரண்டாவது கட்டமாகும். இதற்கு முன்னர், 2025 டிசம்பர் 8 முதல் 19 வரை நடைபெற்ற முதல் கட்ட பயிற்சியில் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் 35 அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர்.

இந்த பயிற்சித் திட்டம், 2025 ஏப்ரல் மாதம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு மேற்கொண்ட அரசுமுறைப் பயணத்தின் போது அறிவிக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட திறன் மேம்பாட்டு ஒத்துழைப்பு திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்படி, இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு (ITEC) உள்ளிட்ட ஏற்கனவே நடைமுறையில் உள்ள அனைத்து திட்டங்களுக்கும் மேலாக, இலங்கை தொழில்முறை நிபுணர்கள் மற்றும் அரசுப் பணியாளர்களுக்காக ஆண்டுதோறும் 1,000 தனிப்பயன் பயிற்சி இடங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

# போரதீவுப்பற்று பிரதேச சபைச் செயலாளராக சண்முகராஜா விஜிதராஜா கடமைகளைப் பொறுப்பேற்றார்

மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று பிரதேச சபையின் செயலாளராக சண்முகராஜா விஜிதராஜா 03.07.2026 அன்று உத்தியோக பூர்வமாகத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

தவிசாளர் விமலநாதன் மதிமேனன் முன்னிலையில், தனது கடமையினைப் பொறுப்பேற்றார்.

இதேவேளை புதிய செயலாளருக்குப் பொன்னாடை போர்த்தி, மலர்மாலை அணிவித்து சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டதோடு, அவர் தனது புதிய பதவியில் திறம்படச் செயலாற்ற சபையின் தவிசாளர், உத்தியோகஸ்தர்கள் தங்களது மனமார்ந்த வாழ்த்துகளையும் தெரிவித்தனர்.

இவர் ஒரு சமூக சேவையாளர் என்பதுடன் சமூகத்திற்கு அவர் ஆற்றிய சேவையை பாராட்டி

தேசமானி, கீர்த்திஸ்ரீ , ஆகிய பட்டங்களை பெற்றுள்ளார்.

அகில இலங்கை சமாதான நீதவான், வடக்கு கிழக்கு மாகாண அரச சேவை உத்தியோகத்தர் சங்க முன்னாள் கிழக்கு மாகாண தலைவர், போன்ற பதவிகளை வகித்தார். கடந்த காலங்களில் முதன் முதலாக GPS&Government Payroll System ஐ மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள



அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் நிறுவிகணினியில் காசோலையை பிரின்ட் செய்வதற்கான software ஐ தனது சொந்த முயற்சியால் தயாரித்து தொடர்பான பயிற்சியை உரிய உத்தியோகத்தர்களுக்கு வழங்கியிருந்தார்.

கராத்தே தற்காப்புக் கலையில் கருப்புப்பட்டி 2nd Da-n, நிலையில் உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு நகர் கடைத்தொகுதியில் தீ பரவல்

மட்டக்களப்பு நகர மத்தியிலுள்ள வர்த்தக நிலையங்கள் சிலவற்றில் (07) அதிகாலை ஏற்பட்ட தீயானது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது.

(07) அதிகாலை 5.00 மணியளவில் திடீரென வர்த்தக நிலையம் ஒன்றில் ஏற்பட்ட தீயானது அடுத்து இருந்த கடைக்கும் வேகமாகப் பரவியுள்ளது.

இது தொடர்பில் மட்டக்களப்பு மாநகரசபையின் தீயணைக்கும் படையினருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் விரைவாக தீயினை அணைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் காத்தான்குடி நகரசபை தீயனைக்கும் பிரிவு, மட்டக்களப்பு தலைமையக தீயணைப்பு பிரிவு மற்றும் பொதுமக்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.



சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர். தீ விபத்தால் ஏற்பட்ட சேதங்களின் மதிப்பீடும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.




# மட்டக்களப்பில் இந்திய தூதரக விண்ணப்ப மையம்

இலங்கையில் இந்திய விசா, கடவுச்சீட்டு, வெளிநாட்டு இந்திய குடியுரிமை (OCI), ஆவண உறுதிப்படுத்தல் (Attestation) உள்ளிட்ட தூதரக சேவைகளை வழங்குவதற்கான புதிய வெளிச்சேவை வழங்குநராக (Outsourcing Service Provider & OSP) Alhind Global Services நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

இந்த புதிய ஏற்பாட்டின் கீழ், 2026 ஜூலை 7 ஆம் திகதி முதல் Alhind Global Services நிறுவனம், கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம், கண்டியிலுள்ள உதவி உயர்ஸ்தானிகராலயம் மற்றும் யாழ்ப்பாணம், ஹம்பாந்தோட்டை ஆகிய இடங்களிலுள்ள இந்திய துணைத் தூதரகங்களின் சார்பில் குறித்த சேவைகளை வழங்கவுள்ளது.

மேலும், தூதரக சேவைகளை மக்களுக்கு எளிதில் அணுகக்கூடிய வகையில் மட்டக்களப்பில் இந்திய தூதரக விண்ணப்ப மையம் (Indian Consular Application Centre & ICAC) புதிதாக திறக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் கிழக்கு மாகாண மக்களுக்கு இந்திய விசா மற்றும் ஏனைய தூதரக சேவைகளைப் பெறுவதற்காக தொலைதூர பகுதிகளுக்கு பயணிக்க வேண்டிய அவசியம் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜூலை 7 முதல் விசா, கடவுச்சீட்டு, OCI மற்றும் பிற தூதரக சேவைகளுக்கான முன்பதிவுகளை ICAC Sri Lanka இணையத்தளத்தின் ஊடாக மேற்கொள்ள முடியும் என்றும் இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

அதேபோல், விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், ஹம்பாந்தோட்டை மற்றும் மட்டக்களப்பு ஆகிய நகரங்களில் அமைந்துள்ள புதிய ஐஇஅஇ மையங்களில் சமர்ப்பிக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**கொழும்பு**

No. 536, Bauddhaloka Mawatha, Colombo 08

**கண்டி**

First Floor, Building No. 478/1/B, Wathuwala, Nugawela, Harispattuwa, Kandy

**யாழ்ப்பாணம்**

No. 43, Racca Road, Jaffna & 40000

**ஹம்பாந்தோட்டை**

CGHW Highway, Hambantota

**மட்டக்களப்பு**

No. 25, Lake Road 01, Puliyanthivu (Puliyanthivu West 179A), Batticaloa



# பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலக நிர்வாக உத்தியோகத்தராக கடமையேற்பு

செங்கலடி, ஏறாவூர்பற்று பிரதேச சபையின் முன்னாள் செயலாளரும், அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத்தின் பொதுச் செயலாளரும், அகில இலங்கை சமாதான நீதிவானுமாகிய வடிவேல் பற்குணன் அவர்கள், நிர்வாக உத்தியோகத்தராக (06.07.2026) வலயக் கல்வி அலுவலகம் பட்டிருப்பில் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் சேவையின் அதி விசேட தரத்திற்கான பபீட்சையில் சித்திபெற்ற இவருக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் அவர்களினால் இந்த நிர்வாக உத்தியோகத்தர் நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெற்ற இந்தக் கடமையேற்பு நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதி கல்விப் பணிப்பாளர்கள் , கணக்காளர் , ஆசிரியர்கள் அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், அவருக்குத் தங்களது வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டனர்.

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையின் பழைய மாணவரான திரு. வடிவேல் பற்குணன் , தனது நீண்டகால சேவைப் பயணத்தில் பல்வேறு முக்கிய திணைக்களங்களில் அர்ப்பணிப்புடன் பணியாற்றியுள்ளார்.

அந்தவகையில்: மட்டக்களப்பு நீர்ப்பாசன திணைக்களம் இமட்டக்களப்பு மேற்கு வலயக் கல்வி அலுவலகம்இபட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகம்இசெங்கலடி நீர்ப்பாசனத் திணைக்களம்இசெங்கலடி ஏறாவூர்பற்று பிரதேச சபை, போன்ற அரச அலுவலகங்களில் இவர் ஆற்றிய பணிகள் குறிப்பிடத்தக்கவை. குறிப்பாக, அவர் ஏறாவூர்பற்று பிரதேச சபையின் செயலாளராகக் கடமையாற்றிய காலப்பகுதியில், உலக வங்கி மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களின் நிதி உதவியுடன், பொது அமைப்புகள் மற்றும் ஏனைய திணைக்களங்களை ஒருங்கிணைத்து பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்திருந்தார்.



அவரது வழிகாட்டலில் ஏறாவூர்பற்று பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் பாதைகள் புனரமைப்பு, பொதுச் சந்தைகள் மற்றும் வணிக நிலையங்களின் சீரமைப்பு உள்ளிட்ட பல உட்கட்டமைப்பு வசதிகளும், மக்களின் அடிப்படைத் தேவைகளும் வெற்றிகரமாக மேம்படுத்தப்பட்டிருந்தன என்பது நினைவுகூரத்தக்கது.

அனுபவம் மிக்க ஒரு அதிகாரி பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையேற்றுள்ளமை, அவ்வலுவலகத்தின் நிர்வாகக் கட்டமைப்புக்கு மேலும் வலுசேர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.




# யாழ்ப்பாணம் – காங்கேசன்துறை ரயில் சேவைகளில் மாற்றம்

மின்சாரத் தொடருந்துப் பெட்டிகளின் (Power sets) பற்றாக்குறை காரணமாக, கல்கிசை மற்றும் காங்கேசன்துறை (KKS) இடையிலான தினசரி கடுகதித் தொடருந்துச் சேவை, ஜூலை 10-ஆம் திகதி முதல் வாரத்திற்கு நான்கு நாட்களாக மட்டுப்படுத்தப்படவுள்ளதாகத் தொடருந்து நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இச் சங்கம் வெளியிட்டுள்ள தகவலின்படி, அதன் பொதுச் செயலாளர் கசுன் சமர ஜயசேகர, பின்வரும் மாற்றங்களை அறிவித்துள்ளார்:

சேவை நாட்களின் மாற்றம்: கல்கிசையிலிருந்து அதிகாலை 5.15-க்கும், கொழும்பு கோட்டையிலிருந்து காலை 5.45-க்கும் காங்கேசன்துறை நோக்கிப் புறப்படும் கடுகதித் தொடருந்து மற்றும் காங்கேசன்துறையிலிருந்து பிற்பகல் 1.50-க்கு கல்கிசை நோக்கித் திரும்பும் தொடருந்து ஆகியன இனி வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் திங்கட்கிழமை ஆகிய நாட்களில் மட்டுமே இயங்கும்.

இதன் விளைவாக, செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறை நோக்கிச் செல்லும் காலை நேரக் கடுகதித் தொடருந்துச் சேவை இடம்பெறாது.

யாழ் தேவி தொடருந்துச் சேவையும் தின சரி ஒரு பயணமாக மட்டுப்படுத்தப்படும் என்று ஜயசேகர தெரிவித்தார். செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் காங்கேசன் துறைக்குச் செல்லும் பயணிகள், கொழும்பிலிருந்து இரவு 8.00 மணிக்குப் புறப்படும் இரவு நேரத் தபால் தொடருந்தைப் பயன்படுத்த வேண்டியிருக்கும்.

தொடருந்துச் சேவைகளின் தொடர்ச்சியான ரத்து மற்றும் குறைப்பு குறித்து அதிருப்தி தெரிவித்துள்ள தொடருந்து நிலைய அதிபர்கள் சங்கம், போதுமான தொடருந்துப் பெட்டிகள் இல்லாததால் பயணிகள் கடும் சிரமத்திற்கு உள்ளாவதாகக் குற்றம் சாட்டியுள்ளது. மேலும், தொடருந்துத் துறை மற்றும் அமைச்சக அதிகாரிகள் இந்தப் பற்றாக்குறையைச் சரிசெய்ய அவசர நடவடிக்கைகளை எடுக்கத் தவறியமை, எதிர்காலத்தில் தொடருந்துச் சேவைகளின் மேலும் வீழ்ச்சிக்கு வழிவகுக்கும் என்றும் அச்சங்கம் எச்சரித்துள்ளது.



# 07 அதிகாரிகள் உட்பட 27 பேரை பலியெடுத்த சிறை மோதல்!

நீர்கொழும்பு சிறைச்சாலையில் கடந்த 5 மற்றும் 6 ஆம் திகதியில் இடம்பெற்ற மோதலில் காயமடைந்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 27 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மோதலில் காயமடைந்து நீர்கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கைதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.அதன்படி, 07 சிறைச்சாலை அதிகாரிகள் உட்பட 27 ஆக உயர்ந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் விசேட விசாரணை ஒன்றை நடத்த ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நிமல் ஜி. புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

அதற்காக (06) நீர்கொழும்பு சிறைச்சாலைக்கு தமது அதிகாரிகள் குழுவொன்றை அனுப்பிய போதிலும், அங்கு நிலவிய அமைதியற்ற சூழல் காரணமாக விசாரணைகளை ஆரம்பிக்க முடியாமல் போயுள்ளது.

எவ்வாறாயினும், எதிர்வரும் சில நாட்களில் நீர்கொழும்பு சிறைச்சாலைக்குச் சென்று குறித்த சம்பவம் தொடர்பான முழுமையான விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளதாக நிமல் ஜி. புஞ்சிஹேவா மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில் நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்த விசாரணைகளை கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இணைந்து ஆரம்பித்துள்ளன. இதற்கான நீதிமன்ற உத்தரவும் பெறப்பட்டுள்ளது.

(05) மற்றும் (06) இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் மொத்தம் 27 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் 20 கைதிகளும், 7 சிறைச்சாலை அதிகாரிகளும் அடங்குவர் என நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷண நாணயக்கார தெரிவித்தார். 23 சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் 54 கைதிகள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் ஆபத்தான நிலையில் உள்ள 18 பேர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலையின் செயற்பாடுகளை முடக்குவதே இந்த வன்முறையின் பிரதான நோக்கமாக இருந்துள்ளது.

வன்முறைக்கு காரணமான சில கைதிகள் அகுணுகொலபெலஸ்ஸ மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மேலதிக பாதுகாப்பு நடவடிக்கையாக, நீர்கொழும்பு சிறைச்சாலையில் இருந்த சுமார் 700 கைதிகள் அகுணுகொலபெலஸ்ஸ, போகம்பர, அனுராதபுரம், பொலன்னறுவை மற்றும் குருவிட்ட ஆகிய சிறைச்சாலைகளுக்கு அவசரமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் அப்பகுதியின் பாதுகாப்பிற்காக பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் மற்றும் சிறைச்சாலைகள் ஆணையாளர் ஏ.சி. கஜநாயக்க தெரிவித்தார்.

மேலும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார (06) நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதலின் போது காயமடைந்த சிறைச்சாலை அதிகாரிகளின் நலன் குறித்து விசாரிப்பதற்காக நீர்கொழும்பு மாவட்ட பொது வைத்தியசாலைக்கு விஜயம் செய்தார். இந்த விஜயத்தின் போது, காயமடைந்த அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டு வரும் சிகிச்சை மற்றும் அவர்களின் குணமடைதலுக்குத் தேவையான வசதிகள் குறித்து வைத்தியர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்களுடன் அமைச்சர் கலந்துரையாடினார். இது இப்படி இருக்க நீர்கொழும்பு சிறைச்சாலையில் கடந்த 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் ஏற்பட்ட மோதல்கள் குறித்து நாடாளுமன்றத்தை கவனத்திற்குக் கொண்டுவருவதற்காக, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று அவசர ஒத்திவைப்பு விவாதமொன்றைக் கோரி சபாநாயகருக்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

குறித்த கடிதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ரஞ்சித் மத்தும பண்டார, கபீர் ஹாஷிம், சுஜீவ சேனசிங்க, கிங்ஸ் நெல்சன், ரோஹிணி விஜேரத்ன மற்றும் ஹெக்டர் அப்புஹாமி ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.



சின்னத்தம்பி
குருபரன்

# ஐரோப்பிய நாடுகளை அச்சுறுத்தும் Omega Block தாக்கமும் மக்களை வாட்டி வதைத்த வெப்பமும்

இயற்கைச் சூழலுக்கும் மனிதனுக்கும் இடையிலான மோதல் காரணமாக சூழல் மிக மோசமான பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. வெப்பக் காற்று, அசுத்தக் காற்று, சூழல் மாசடைதல், துருவப் பிரதேசங்களிலுள்ள பனி மலைகள் உருகுதல் எனப் பாரிய தாக்கங்களை உலகம் கண்டு கொண்டிருக்கிறது.

இயற்கைக்குப் போர்வையாக இருந்த காடுகள் அழிக்கப்பட்டதன் காரணமாகவும் தொழிற்சாலைக் கழிவுகள். குளோரோ புளோரோ காபன், மெதேல் வாயு, வாகணப் புகைகள் போன்ற இன்னும் பல காரணமாகவும் உலகுக்குப் போர்வையாக அமைந்த பச்சை வீட்டு விளைவில் தாக்கம் ஏற்பட்டுள்ளது. ஓசோன் படையில் ஏற்பட்ட அதிகரித்த ஓட்டைகள், புவிக்கும் ஓசோன் படைக்கும் இடையெ புதிதாகத் தோன்றியிருக்கும் பத்துக்கு மெற்பட்ட இரசாயன மூலக் கூறுகளிலான புதிய படை ஆகியவற்றால் பச்சை வீட்டு விளைவில் ஏற்பட்ட எதிர் மறைத் தாக்கம் காரணமாகப் புவி வேகமாக வெப்பமடைந்து செல்கின்றது. பச்சை வீட்டு விளைவு, புவி வெப்பமடைதல், காலநிலை மாற்றம் ஆகிய மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை.



பொன்று அவற்றுக்கிடையே தெளிவான வேறுபாடுகளும் காணப்படுகின்றன.

பச்சை வீட்டு விளைவு (Greenhouse Effect) பூமிக்கு இயற்கை தந்த பாதுகாப்பான ஒரு போர்வையாகும். சூரியனில் இருந்து வரும் வெப்பத்தை பூமியின் வளிமண்டலத்தில் (Atmosphere) உள்ள சில வாயுக்கள் (கார்ப்பன் டை ஒட்சைட்டு, மெதேன், நீராவி போன்றவை) அப்படியே விண்வெளிக்குத் திரும்பிச் செல்லவிடாமல் தடுத்து, ஓரளவுக்குத் தக்கவைத்துக் கொள்ளும் ஆற்றல் கொண்டது. இந்த இயற்கை நிகழ்வு இல்லையெனில் புவியின் சராசரி வெப்பநிலை உறைநிலைக்குக் கீழ் (18 பாகை C) சென்று, உயிரினங்கள் வாழத் தகுதியற்ற ஒரு பனிப்பந்தாக பூமி மாறியிருந்திருக்கும்.

புவி வெப்பமடைதல் (Global Warming) என்பது இயற்கைச் சராசரி அளவை விடக் கூடுதலான வெப்பம் பூவியில் தேங்கி, உலகளாவிய பீதியில் பூவியின் சராசரி வெப்பநிலை தொடர்ந்து உயர்ந்து செல்வதைக் குறிக்கும். மனிதனின் இயற்கைக்கு ஒவ்வாத செயல்பாடுகள் (தொழிற்சாலைக் கழிவுகள், வாகனப் புகை, காடுகளை அழித்தல், நிலக்கரி மற்றும் எரிபொருட்களை எரித்தல்) காரணமாக வளிமண்டலத்தில் பச்சை வீட்டு வாயுக்களின் (Greenhouse Gases) அளவு மிக வேகமாக அதிகரித்து வருவதனால் புவி வெப்பமடைந்து செல்கிறது.

காலநிலை மாற்றம் (Climate Change) காரணமாகப் புவி வெப்பமடைவதால் ஏற்படும் ஒட்டுமொத்த விளைவு, நீண்டகால மாற்றங்கள் ஆகியன காலநிலையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றனது. புவி வெப்பமடைவதால் பூமியின் ஒட்டுமொத்த தட்பவெப்ப நிலையின் சமநிலை குலைகிறது. ஒரு குறிப்பிட்ட பகுதியின் வானிலை பல தசாப்தங்களாக (Decades) எப்படி மாறுகிறது என்பதை இது குறித்து நிற்கிறது. இதன் காரணமாகத் துருவப் பகுதிகளில் உள்ள பனிப்பாறைகள் வேகமாக உருகி, கடல்



நீர்மட்டமும் உயர்ந்து செல்கிறது. இத்தாக்கத்தின் விளைவாகப் பசிபிக் பெருங்கடலில் எல் நினோ (El Ni„o), லா நினா (La Ni„a) போன்றவை ஏற்பட்டு, வெப்பநிலை மாற்றங்களால் உலகளாவிய வானிலையையே தலைகீழாக மாற்றும் இரு முக்கிய இயற்கை நிகழ்வுகளாக மாறியிருக்கின்றன. இவை இரண்டும் ENSO (El Ni„o&Southern Oscillation)★ எனப்படும் ஒரே சுழற்சியின் இரு வேறுபட்ட முனைகள் ஆகும்.

எல் நினோ (El Ni„o – 'குட்டி பையன்') என்பதை ஸ்பானிய மொழியில் 'குட்டிப் பையன்' சுட்டிப் பையன் (Little Boy) அல்லது 'இயேசு பாலன்' எனவும் பொருள் கொள்வர். எல் நினோவின் தாக்கம் கிறிஸ்துமஸ் காலத்தில் தொடங்குவதால் இயேசு பாலன் என அதனை அந்நாட்டு மக்கள் அழைத்தனர். வழக்கமாகப் பசிபிக் பெருங்கடலில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வீசும் வர்த்தகக் காற்றுப் (Trade Winds) பலவீனமடைந்து, மத்திய மற்றும் கிழக்குப் பசிபிக் பெருங்கடலின் (தென் அமெரிக்காவின் பெரு நாட்டின் கடற்கரையோரம்) மேற்பரப்பு நீர் வழக்கத்துக்கு மாறாக சற்றுக் அதிகமாக வெப்பமடைகிறது. இதன் காரணமாக அவுஸ்திரேலியா, இந்தோனேசியா, இந்தியா, இலங்கை போன்ற தெற்காசிய நாடுகளில் பருவமழை பொய்த்து, கடுமையான வறட்சியும், காட்டுத்தீயும் ஏற்படும். இதற்கு எதிர்மாறாக, தென் அமெரிக்க நாடுகள், (பெரு, ஈக்குவடோர்) அமெரிக்காவின் தெற்குப் பகுதிகளில் வழக்கத்திற்கு மாறான கடுமையான மழையும் வெள்ளப் பெருக்கும் ஏற்படும். எல் நினோத் தாக்கம் அதிகம் காணப்பட்ட ஆண்டுகளைப் பொதுவாக உலகளாவிய நீதியில் மிக வெப்பமான ஆண்டுகளாகப் பதிவிடுவர்.

லா நினா (La Ni„ச் – 'குட்டி பெண்') என்பது ஸ்பானிய மொழியில் 'குட்டிப் பெண்' சுட்டிப் பெண் என்ற பொருள்பட அழைப்பர். இது எல் நினோவிற்கு முற்றிலும் எதிர்மாறான நிகழ்வாகும். பசுபிக் பெருங் கடலில் வீசும் வர்த்தகக் காற்று வழக்கத்தை விட மிகப் பலமாக வீசுவதனால், மத்திய மற்றும் கிழக்குப் பசிபிக் பெருங்கடலின் மேற்பரப்பில் உள்ள வெதுவெதுப்பான நீர் அவுஸ்திரேலியா நோக்கித் தள்ளப்பட்டு, தென் அமெரிக்கக் கடற்பரப்பில் உள்ள கீழ் அடுக்குக் குளிர்ந்த நீர் மேலே வருகிறது. இதன் காரணமாகப் பசிபிக் கடல் பரப்பு வழக்கத்தை விட மிகக் குளிர்ந்து எதிர் விளைவை ஏற்படுத்துகிறது. அதனால், அவுஸ்திரேலியா, இந்தோனேசியா மற்றும் தெற்காசிய நாடுகளில் (இந்தியா, இலங்கை) வழக்கத்தை விட மிகக் கடுமையான பருவமழை பெய்து வெள்ள அபாயத்தை ஏற்படுத்துகிறது. இதற்கு எதிர்மாறாக, தென் அமெரிக்கா, வட அமெரிக்காவின் சில பகுதிகளில் கடுமையான வறண்ட காலநிலை நிலவுவதனையும் அவதானிக்கலாம். இக்காலப் பகுதியில் அட்லாண்டிக் பெருங்கடலில் உருவாகும் சூறாவளிகளின் (Hurricanes) எண்ணிக்கை, அதன் தீவிரம் காரணமாகப் பாரிய சேதத்தை ஏற்படுத்துகின்றன.

பொதுவாக இந்த இரண்டு நிகழ்வுகளும் 9 முதல் 12 மாதங்கள் வரை நீடிக்கும். சில நேரங்களில் லா நினா இரண்டு ஆண்டுகள் வரை கூடத் தொடரலாம். பருவநிலை மாற்றத்தின் காரணமாக இவற்றின் தீவிரமும், இவை தோன்றும் கால இடைவெளியும் தற்போது மிகவும் கணிக்க முடியாததாக மாறி வருகின்றன.

தற்போது மேற்கு ஐரோப்பிய நாடுகளில் (2026 ஜுன்/ஜுலை மாதங்களில்) கடுமையான வெப்ப அலைக்குக் (Heatwave) காரணமாக இருக்கும் இந்த நிகழ்வை "Omega Block' என அழைக்கின்றனர். Omega Block என்பது, வளிமண்டலத்தின் உயர் அடுக்குகளில் உள்ள காற்று ஓட்டம் (Jet Stream) நேராகச் செல்லாமல், கிரேக்க எழுத்தான ஒமேகா (Omega) வடிவத்தில் வளைந்து, தேங்கி நிற்கும் போது இந்த நிலை உருவாகின்றது. இதற்கும் எல் நினொவுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புள்ளது. இந்த அமைப்பில், மத்திய பகுதியில் ஒரு பலத்த 'உயர் அழுத்த மண்டலமும்' (High&Pressure System) அதன் இரு பக்கங்களிலும் (கிழக்கு, மேற்கு) இரு' தாழ் அழுத்த மண்டலமும் (Low&Pressure Systems) தோன்றும். இதன் நடுவில் காணப்படும். உயர் அழுத்த மண்டலம் ஒரு மூடி போலச் (வெப்பக் குவிமாடம் –Heat Dome) செயல்பட்டு, சூடான காற்றை ஒரே இடத்தில் சிறைப்பிடித்து வைத்துக் கொள்ளும். காற்று ஓட்டம் தன் பாதையை மாற்றிக் கொள்வதால், வழக்கமாக மேற்கிலிருந்து



கிழக்கு நோக்கி நகரும் வானிலை அமைப்புகள் நகராமல் ஒரே இடத்தில் முடங்கிவிடுகின்றன (Atmospheric Traffic Jam). அதனால், உயர் அமுத்த மண்டலத்தில் காற்று கீழ்நோக்கி அமுக்கப்படும். அவ்வாறு அமுக்கப்படும் போது காற்று மேலும் சூடாகிறது. இந்த மாற்றத்தினால் மேகங்கள் உருவாவது தடுக்கப்பட்டு, நாள் முழுவதும் இடைவிடாத சூரிய ஒளி நிலப்பரப்பை நேரடியாகச் சுட்டெரிக்கிறது. இதேவேளையில் தோன்றும் வளிமண்டல சுழற்சியானது ஆபிரிக்காவின் சகாரா பாலைவனத்திலிருந்து மிக வெப்பமான, வறண்ட காற்றை வடக்கு நோக்கி ஐரோப்பாவிற்குள் இழுத்து வருகிறது. இதுவே, 15 க்கு மேற்பட்ட ஐரோப்பிய நாடுகளின் அதிகரித்த வெப்பத்துக்குக் காரணமாக அமைந்தது.

இந்த "Omega Block' காரணமாகப் பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்பெயின், இங்கிலாந்து, நெதர்லாந்து, பெல்ஜியம் போன்ற மேற்கு, மத்திய ஐரோப்பிய நாடுகள் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. பல நாடுகளில் பகல்நேர வெப்பநிலை 40 ஓஇ முதல் 43 ஓஇ வரை உயர்ந்து வரலாற்றுச் சாதனைகளை முறியடித்துள்ளது. பகல் மட்டுமின்றி, இரவு நேர வெப்பநிலை 30 ஓஇ முதல் 33 ஓஇ வரை வெப்பம் குறையாமல் இருந்தமையால் மனித உடல்களாலும், கட்டிடங்களாலும் வெப்பத்தைத் தணிக்க முடிவதில்லை. ஐரோப்பிய நாடுகளின் கட்டிட வடிவமைப்பானது குளிருக்குத் தாக்குப் பிடிக்கக் கூடியதாக மாத்திரம் அமைந்திருந்தமையும் வெப்பத்தைக் கட்டுப்படுத்த முடியால் 2,500 பேருக்கு மேற்பட்ட உயிரிழப்புகள் ஏற்பட்டமைக்குக் காரணமாக அமைந்தன.

பிரான்ஸ், பெல்ஜியம் உள்ளிட்ட நாடுகளில் திடீரென அதிகரித்த வெப்பத்தைத் தாங்க முடியாமல் நீர்நிலைகளில் குளிக்கும் போது ஏற்பட்ட விபத்துகளால் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். அத்தோடு, புகையிரதப் பாதைகள் வெப்பத்தால் விரிவடைந்தமை, மின்சாரத் தேவை அதிகரித்தமையால் ஏற்பட்ட மின்தடை, காட்டுத்தீ (Wildfires) அபாயங்கள் என்பவற்றால் வெப்பம் மேலும் அதிகரித்தன.

"Omega Block' என்பது காநிலை மாற்றத்தால் இயற்கையாகத் தோன்றும் ஒரு வானிலை நிகழ்வுதான் என்றாலும், 'புவி வெப்பமயமாதல்' இதன் தீவிரத்தைப் பல மடங்கு அதிகரித்துள்ளது. உலகளாவிய வெப்பநிலைச் சராசரியை விட ஐரோப்பாக் கண்டம் இரண்டு மடங்கு வேகமாக வெப்பமடைந்து வருவதால், இத்தகைய "Omega Block' நிகழ்வுகள் வழக்கத்தை விட 2 முதல் 4 பாகை செல்சியஸ் கூடுதல் வெப்பத்தைத் தருகின்றன. மேலும், இவை நீண்ட நாட்களுக்கு ஒரே இடத்தில் நிலைத்து நிற்கும் தன்மையையும் கொண்டுள்ளதனால் எதிர்காலத்தில் உயிரிழப்புகள் அதிகரிப்பதோடு விவசாயம், கைத்தொழில், வர்த்தகம், மீன்பிடி, போக்குவரத்து, சுகாதாரம் போன்ற துறைகள் மிக மோசகப் பாதிப்படைந்து அந்நாடுகளில் அரசியல், பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கான வாய்ப்புக்களும் உள்ளன.

எதிர் காலத்தில் ஐரொப்பிய நாடுகள் "Omega Block' வெப்பநிலை மாற்றத்துக்குத் தாக்குப்பிடிக்கக் கூடியவகையில் கட்டுமானம், கட்டமைப்பு முறைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவது பொருத்தமாக இருக்கும். கட்டிடங்கள் அமைக்கும்போது வெப்பம், குளிருட்டி வசதிகள் கொண்ட வீடுகளை அமைப்பதில் கவனம் செலுத்த வேண்டும். மின்சாரம், பொக்குவரத்து, விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் போன்ற துறைகளிலும் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் உலக காலநிலை மையம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் 2026 இல் இலங்கையில் எல் நினோ பாதிப்பினால் மூன்று கட்டங்களில் வறடசி, சூறாவளி, பாரிய வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக எச்சரித்திருக்கின்றது. அதன்படி யூலை, ஆகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் வறட்சியும், நவம்பர், திசெம்பர் மாதங்களில் சூறாவளியும், சனவரி, பெப்ரவரியில் வெள்ளப்பெருக்கும் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக நம்பப்பட்டு அதற்கான முன்னேற்பாடுகளை அரசு செய்து வருகிறது. 'வருமுன் காப்போம்' என்பதற்கிணங்க ஒவ்வார் தனிநபரும் அனர்த்தங்களுக்கு முகம் கொடுப்பதற்கான தயார் நிலையில் இருப்பது உயிர்களையும் சொத்துக்கள், உடமைகளையும் பாதுகாக்க ஏதுவாக அமையும்.



சுவிட்ஸர்லாந்து ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

# கொட்டகலை புனித அந்தோனியாருக்கு வருடாந்த திருவிழா















**கொட்டகலை நிருபர்**

கொட்டகலை, லொக்கில் தோட்டத்தில் அமைந்துள்ள புனித அந்தோனியார் திருச்சுரூபத்தின் 10 ஆம் ஆண்டு பூர்த்தி மற்றும் வருடாந்த திருவிழா கடந்த ஜூலை 3 வெள்ளி ஆரம்பமாகி ஞாயிற்றுக்கிழமை 5 ஆம் திகதி வரை பக்தி பூர்வமாக நடைபெற்றது.

இறுதி நாளான ஜூலை 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணிக்கு தலவாக்கலை புனித பத்திரிசியார் ஆலய பங்குத் தந்தை அருட்பணி ஜேசுதாசன் மற்றும் அருட் சகோதரிகள், அதிதிகள் வரவேற்கும் நிகழ்வைத் தொடர்ந்து திருவிழா பாடல் திருப்பலி சிறப்பாக ஒப்புக்கொடுக்கப்பட்டதுடன், அந்தோனியாரின் திருச்சுரூபத்தி ஆசிர்வாதம் வழங்கப்பட்டதுன், கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஏற்பட்டுக்குழுவினரால் மதிய உணவுகள் வழங்கி வைக்கப்பட்டமை சிறப்பம்சமுமாகும்.

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

# பத்திரிகை

## வாரத்தில் ஒருமுறை உங்கள் கரங்களில் மின்னிதலாக...

வேதாந்தி : 004178 6264375

supeedsam@gmail.com

சுபீட்சம் வாட்ஸ் ஆப் குழுவில் இணைய இங்கே தொடவும்....

CLICK HERE